
சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 7	இதழ்: 08	ஜனவரி - 2026	விலை - ரூ.20/-
VOL:7	ISSUE: 08	January - 2026	Rs. 20/-



சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.850/- மட்டும் செலுத்தி சந்தாதாராராகுங்கள்!

அரிய

பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"



* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.

* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: ரூ.1001/- மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI
ஆண்டு-7 மலர்-8 ஜனவரி-2026

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

எமது இறைவன்
ஸ்ரீ சாய்நாதர்
எமது சமயம்
சாய் சமயம்
எமது மந்திரம்
ஓம் ஸ்ரீ சாய்ராம்
எமது வேதம்
சாய் சத்சரிதம்
எமது புனித பூமி
சீரடி
எமது கொள்கை
எல்லாம் சாயி
எல்லாமே சாயி!

இதழ் வடிவமைப்பு
ஜெ.செந்தில்குமாரி

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு, அயனாவரம்,
சென்னை - 600023.
செல்: 99418 16692, 88258 31068

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.

அமுத மொழி

அன்புக் குடிநீதையேயம

பக்தன் தன் முன்னிலையில் இருந்தாலும் நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்தாலும் பாபாவின் அன்பின் வேகமும் சக்தியும் ஒன்று போலவே தான் இருக்கும்.அவரது திருவருள் வெளி வருவதற்கு பக்தன் முறையாக எந்த பிரார்த்தனை செய்ய வேண்டிய அவசியமில்லை.

ஆனால், ஒருவர் பாபா மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துவிட்டு, எங்கே அலைந்து திரிந்தாலும் சாயி தமது ரட்சிக்கும் அருள் மழையை அவர் மீது பொழிந்து தம்மை ஆபத்துக்களில் இருந்தும், பிரச்சனைகளில் இருந்தும் காப்பதை உணரமுடியும்.

"பிரார்த்தனை செய்ய வேண்டிய அவசியமில்லை". உன் கவனம் என் மீது இருக்கட்டும். நான் உன்னை கவனித்து கொள்கிறேன் ஓடுவதாக இருந்தால் துரத்திக்கொண்டு ஓடுங்கள். வாழ்க்கை வாழ்வதற்கே, நிற்பதாக இருந்தால் எதிர்த்து நில்லுங்கள். என்ற சாஸனாம்ருத மொழிகளை நினைவில் இருத்துங்கள்.

உனக்கென படைக்கப்பட்ட அனைத்தும் நிச்சயமாக உன்னை வந்தடையும். உன் வேதனை பலரை சிரிக்க வைக்கலாம். ஆனால், உன் சிரிப்பு ஒருவரைக் கூட வேதனைப்படுத்தகூடாது. நம் வார்த்தையால் ஒருவர் மனம் நிம்மதி அடைகிறது என்றால் அதுவும் தர்மம் தான்.

என் வார்த்தைகளில் நம்பிக்கை வை எதை நீ தேடினாயோ அது உன்னைத் தேடி வரும்.

நீ செல்லும் இடமெல்லாம் உனது நம்பிக்கையான சாய் நான் துணையாக இருக்கிறேன் நல்லதே நடக்கும்!

- பகவான் ஸ்ரீ சீரடி சாய்பாபா

ஆசிரியர் பக்கம்...

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

பகவான் சாயிநாதரின் பேரருளால் தொண்ணூறாவது இதழ் மூலம் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம். சென்ற மாதத்தின் புத்தக வெளியீட்டு விழா 07.12.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை ஐந்து மணிக்கு, சென்னை அயனாவரம், 2/15, போலீஸ் மாணிக்கம் தெரு இராமலிங்கசுவாமி சத்ய சன்மார்க்க சங்கத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இம்மாத இதழை திருமதி. மோகனலட்சுமி அவர்கள் வெளியிட, சாயி பக்தர்கள் திரு. அசோக், திருமதி.அபிராமி அசோக், திருமதி.லோகேஸ்வரி கார்த்திக் ஆகியோர் இணைந்து பெற்றுக்கொண்டு சிறப்பித்தார்கள். மேலும் ஏராளமான சாயிபக்தர்கள் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்.

விழாவில், திரு. சுந்தர் சாய்ராம், திரு. சீனிவாசன், திருமதி. மாதங்கி பாலாஜி ஆகியோர் தங்களதுகருத்துக்களைபகிர்ந்துகொண்டனர். சாய் தியானாலயா ஆத்ம ஞான குழுவின் அன்னதானக் குழுவினர் அனைத்து பக்தர்களுக்கும் சுவையான மாலை






சிற்றுண்டியளித்து மகிழ்ந்தனர்.

சூழ்நிலைக்கு ஏற்ப வாழ்க்கையை அமைத்துக் கொள்வது தான் வெற்றிகரமான வாழ்க்கையின் பூரண இரகசியம். இந்த உண்மையை உணர்ந்தவர்களுக்கு வாழ்வில் வெற்றி நிச்சயம். வெற்றிப் பாதையில் பயணிக்க விரும்புபவர் கடை பிடிக்க வேண்டிய முக்கிய மான அம்சமும் கூட.

இருப்பதை எண்ணி மகிழ்வுறாமல், இல்லாததை எண்ணி ஏக்கம் கொள்வது.

இதில் மிக முக்கியமானது. ஆம், வாழ்க்கையில் அனைத்தும் கிடைத்தால் தான் நான் மகிழ்ச்சியாக இருப்பேன் என்று எண்ணினால் இந்தப் பிறவியில் அது சாத்தியமில்லை. காரணம் குறையில்லாத மனித வாழ்க்கை என்பதே இது வரை இல்லை என்பது தான் சத்தியம்.





நமது மகிழ்வான பொழுது களை முழுவதுமாக கெடுக்க கூடிய வல்லமை பெற்றது, நம்மிடம் இல்லாத ஒன்றை எண்ணி ஏக்கம் கொண்டு நிம்மதியைத் தொலைப்பது தான். ஒன்றை மட்டும் நினைவில் கொள்ளுங்கள். நம்மிடம் சாயி இருக்கும்போது இல்லாதது என்பதே இல்லை என்பதை உறுதியாக நம்புங்கள்.

அதைவிடுத்து எப்போது பார்த்தாலும், சாயியிடம் உங்களிடம் இல்லாதவைகளுக்காக பிரார்த்தனை வைத்து ஏங்கித்தவிக்காதீர்கள். இதுவரை சாயி உங்களுக்கு கொடுத்தவற்றுக்காக நன்றி கூறுங்கள். புயல், மழை, வெள்ளம் என பாபாவிடம் பாதுகாக்க வேண்டி பிரார்த்தனை, பிரார்த்தனை என்று கதறுகின்றீர்களே! செய்த தவறுக்கு பாபா நமக்களித்த தண்டனை அது என்று ஏன் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றீர்கள்.

இந்த உலகம் மனிதனால் தன் இறுதிக் காலத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கின்றது. இனி செய்த தவறுக்கு மன்னிப்புக்கேட்டு வருந்துவதைத் தவிர வேறெதையும் செய்வதற்கில்லை. நாம் இறுதிக்காலத்தில் இருக்கின்றோம் என்று உணர்ந்து சாயியிடம் சரணடைவதே நாம் இருக்கின்ற சொச்ச காலத்தில் நிம்மதியாய் வாழ்வதற்கு ஒரே வழி!

பகவான் சாயிநாதரின் பேரருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று உலக மாந்தர்கள் அனைவரும் இயற்கை பேரிடர், போர், பகை அச்சமின்றி ஆரோக்கியத்துடன், மன அமைதியுடனும் வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்! ●

புத்தக வளர்ச்சி நன்கொடை

நமது சாய் மகராஜ் குருவைத்தேடி ஆன்மீக மாத இதழ் கடந்த 90 மாதங்களாக பக்தர்களிடம் இருந்து எந்தவித எதிர்பார்ப்புமின்றி பரந்த மனம் படைத்த நல்லோர்களின் உதவியால் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது. இந்த இதழில் மூலம் பயன் பெற்றோர் ஏராளம். நம் இதழ் இன்னும் ஏராளமான நபர்களுக்குச் சென்று எல்லோரும் பயன்பெற வேண்டும் என்று கருதுகின்றோம். இந்த இதழில் வெளிவரும் செய்திகள் உங்களுக்குப் பிடித்திருந் தால், இந்த செய்திகள் அனைவருக்கும் சென்று சேர வேண்டும் என்று நீங்கள் நினைத்தால் தங்களால் இயன்ற காணிக்கையை புத்தக வளர்ச்சிக்கு அளித்து எங்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் அளிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொன்கின்றோம்.

இம்மாதம் புத்தக வளர்ச்சி நன்கொடை அளித்தவர்கள்:

திருமதி. இராஜேஸ்வரி, மதுரவாயில். ரூ.300.
திரு. எல்.காமராஜ், மதுரவாயில். ரூ.200
திருமதி. ஜெயலட்சுமி தேவக்குமார். பெரவள்ளூர். ரூ.200.
திரு. தியாகராஜன். சென்னை. ரூ.200.
திரு.வேணுகோபால், நங்கநல்லூர். ரூ.100.
திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன், நங்கநல்லூர்.ரூ.100.
திருமதி. ஈஸ்வரி தனசேகர், தாம்பரம். ரூ.100.
திருமதி. கவிதா ராஜூ, அயனாவரம். ரூ.100.
திரு. சாய்ராம், வில்லிவாக்கம். ரூ.100
திருமதி. பானு. குடந்தை. ரூ.100.
திரு. சாய்ராஜா. விழுப்புரம் ரூ.100.

ஓம் சாய்ராம். சத்குரு சாய் மஹராஜ் பொற்றா மரை திருவடிகள் பணிந்து, குரு வாழ்க குருவே என்றும் எல்லாமுமாய் எல்லோர்க்கும் என் பதை உணர்ந்து போற்றி உய்வோமாக. நமது சாய் அன்பர்கள்



தொடர் - 31

திருவருள் தேடி

அனைவருக்கும் சுந்தர் சாய் இதய பூர்வமான, வணக்கத்துடன் கூடிய, ஆங்கிலப் புத்தாண்டு, மற்றும் தமிழர் திருநாள் நல்வாழ்த்துக் களையும் பகிர்ந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சி.

நமது "திருவருள் தேடி" அனுப வத்தை தங்கள் அனைவருடனும் தொடர்ந்து பகிர்ந்து அனுபவிக்க தளம் அமைத்து அருளும் நமதருமை குண்டலினி யோகி ஸ்ரீராம் பாபாவிற்கு எனது உளம் கனிந்த நன்றிகள். ஷீர்டி சாய்நாத மஹராஜின் அளவற்ற கருணையின் நிழலில் அவர்தம் குடும்பமும், சாய் தியானாலயா ஆத்ம ஞானியர் குழாமும் வாழ்க வளர்க எந்நாளும். இனிய புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துக்கள் சாய்.

சென்ற இதழில் திருமதி மஞ்சரி சாய்ராம் அவர்களின் அறிமுகம் மற்றும் அவர்தம் ஆன்மீகப் பணியில் நமக்கும் ஒரு ஆரம்பகால தொடர்பாய் அமைந்த சம்பவங்கள் பற்றி பகிர்ந்தோம். எந்த ஒரு விவரமும் இன்றி, ஹனுமன் சாலிசா 108 முறை பாராயணம் செய்யும்படி உள்ளுணர்வு சொன்ன அனுபவத்தை பார்த்தோம்.

ஆனால் அவர் பூமிதானம் செய்ய உத்தேசித்த இடத்தை சென்று பார்க்கும்போது அந்த ஆச்சரியம் நமக்கு ஒரு தெய்வ சங்கல்பம் வழி காட்டிக் கொண்டிருப்பதை உணர்த் தியது. ஆம் அந்த கிராமத்தின் பெயரே "மாருதிபுரம்" எனவும் மற்றும் 100 மீட்டர் அருகில் ஓர் சக்திவாய்ந்த புராதன ஆஞ்சநேயர் கோவில் அமைந்திருந்ததும். நமக்கே புதிராய் இருந்தது. 'ஜெய் ஸ்ரீராம்' என்னே ஓர் அபார கருணை!

அந்த கோவிலுக்கு கூரை அமைக்க இயலாது. (இடிந்து விழுந்து விடுமாம்). வானமே கூரையாக அமைந்து பல்லாண்டு காலமாக அவ்வூரையே காத்து

சுந்தர் சாய்
9789404451/9176182498

நிற்கும் ஆஞ்ஞானு பாகுவான அனுமன் சிலா ரூபம். நம் அனைவரையும் கயிற்றால் கட்டி இழுத்து தரிசனம் தந்து காத்து அருளும் அருமை. ஷீர்டி சாய், அனுமனின் அவதாரமே அல்லவா? வியப்பூட்டும் பிரபஞ்சகனெக்டிவிடி மற்றும் நெட்ஒர்க் எப்படி வேலை செய்கிறது என எண்ணிப்பார்க்கவே இயலாது என்றால் மிகையாகாது. வேறு பிராமணம் இன்னும் என்ன வேண்டும் சாய்ராம்?

உடனேயே உற்சாகமாக படிப் படியாக காய் நகர்த்த ஆரம்பித் தோம். மஞ்சரி சாய் அந்த சமயம் பாண்டிச்சேரியில் தங்கியிருந்தார். நாங்கள் கிராம தேவதை கோவிலுக்கு சென்று புடவை சார்த்தி வழிபட்டு உத்தரவு வாங்கினோம். பின்னர் ஊர் தலைவர் மற்றும் மூத்த வர்கள் சம்மதம் அவசியமாயிற்று. அதையும் முயற்சிசெய்து வாங்கி, இடத்தை பார்வையிட்டோம்.

அந்த நிலம் மஞ்சரி சாய்ராம் அவர்களின் பூர்வீகசொத்து. ஆனால் மிகவும் குப்பை கூளமாகவும், சுற்றிலும் அனுமதி இன்றி ஆக்கிர மிப்பு செய்யப்பட்டும் இருந்தது. அந்த இடத்தை சுத்தம் செய்து டின் ஷீட் உபயோகித்து சுமார் 8 x 10 க்கு ஒரு சிறிய ரூம் அமைத்து, ஆரம்ப கட்ட வேலை தொடங்கப்பட்டது.

குரு பூர்ணிமா தினத்தில், அருகே அமைந்திருக்கும் ஆஞ்சநேயர் கோவிலில் அபிஷேகம் செய்து, புது வஸ்திரம், 1008 வடமாலை சார்த்தி வழிபாடு செய்தோம். மஞ்சரி வீட்டில் வைத்து பூஜை செய்யும் ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் அத்திமரத் தாலான பாதுகைகட்கு அபிஷேகம்



செய்து, தத்த ஹோமம் செய்தோம்.

அடியேன் அப்பாதுகைகளை தலையில் சுமந்து, நாதாஸ்வரம் மேளத்துட ன் ஊர்வலமாக வந்து அங்கு விளக்கேற்றி ஸ்தாபணம் செய்தோம். நமக்கு கிடைத்தற்கரிய ஆசீர்வாதமாக இந்த வாய்ப்பு அமைந்த அதிர்ஷ்டத்தை எண்ணி இன்றளவும் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

அங்கே ஷீர்டி சாய் படம், காஞ்சி மகா பெரியவர் படமும் வைத்து, தினமும் வாசல் பெருக்கி கோல மிட்டு அகண்ட தீபம் அமைத்து, பௌர்ணமி தோறும் அன்னதானம் செய்ய தொடங்கினோம். அந்த ஆரம்ப நிலையிலேயே பொருளா தார நெருக்கடியும் இருந்ததால், மேலே என்ன செய்யப்போகிறோம், தியான மையமா? அல்லது பஜனை கூடமா? என தெளிவு இல்லாமல் இருந்தது.

பின் வரும் காலங்களில், மஞ் சரி சாய்ராம் அனுபவித்த கோவில் சம்பந்தப்பட்ட சோதனைகளும், கடுமையான உடல், ஆரோக்கியம், குடும்ப பிரச்சனைகளும் வார்த்தை களால் விவரிக்க இயலாது. உடனிருந்து ஒரு பார்வையாள னாகவும், வார்த்தைகளால் ஆறுதல்

அளித்தும் தொடர்ந்து பயணித்து இந்த மாபெரும் தெய்வீகப்பணி நிறைவேற சத்குரு நமக்களித்த வாய்ப்பு ஒரு வியப்பு.

காரணமின்றி ஒரு நட்பையும், நெருக்கத்தையும் சத்குரு சாய் மஹராஜ் ஏற்படுத்துவதில்லை. ரூ 5,000 திரட்டுவதே சவலாக இருக்க இன்று ரூ 50 லட்சம் செலவில் குரு தத்த பாதுகா க்ஷேத்ர ராஜிதம் எனப்படும் ஸ்ரீ ஸ்வாமி சமர்த்த சேவா சமஸ்தான் கோவில் கம்பீர மாக அமைந்து மஹா கும்பாபி ஷேகம் செய்யப்பட்டு, அமர்க் களமாக விசேஷ பூஜை நிகழ்ச்சி களும், வெளி மாநிலம், அயல் நாட்டிலிருந்தும் சாய் பக்தர்களும் தரிசனம் செய்ய வருவதும் ஒரு மலைப்பை ஏற்ப்படுத்தும் அனுபவம்.

ஸ்ரீகுரு தத்த அவதார திருத் தலங்களுக்கு பயணம் செய்யும் குழுவில் நம்மையும் சேர்த்து, இப்படி ஒரு நட்பையும் அமைத்துக் கொடுத்து, மிகப்பெரிய புண்ணிய காரியத்தில் நமக்கும் ஒரு உறுதியான பங்களித்ததுடன், தொடர்ச்சியாக ஸ்ரீ ஸ்வாமி சமர்த்தர் லீலைகள் பற்றிய விளக்கமாக தமிழில் ஒரு அருமையான நூலையும் எழுதும் பணியை திருமதி. மாதங்கி பாலாஜி அவர்களுக்கு ஆசீர்வதித்து, மாருதிபுரம் கோவிலின் முதல் வருஷாபிஷேகம் நாளன்று அதை அங்குள்ள ஸ்வாமி பாதுகையில் சமர்ப்பணம் செய்யும்படி பணித்து, அடியேனை அந்த லீலாம்ருதத்தை கோபுரம் டிவி வாயிலாக எல்லோருடனும் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பையும் உருவாக்கிய சாமர்த்தியம் முழுக்க முழுக்க ஸ்ரீ ஸ்வாமி சமர்த்தர் லீலைகட்கு ஒரு நிகழ்கால சத்யப்ரமாணம்.

அத்துடன் இந்த திருப்பணிகள் நிகழும் காலங்களிலும், இடங்களிலும் ஸ்வாமி சமர்த்தர் மஞ்சரி சாய்ராம் மற்றும் மாதங்கி பாலாஜி யையும் ஆட்கொண்டு வேலை விருவிருப்பாய் நடைபெற, அவரது முத்திரை பதித்த ருத்ர தாண்டவம் ஆடியதும் அறிந்திருந்த அடியேன் சாட்சி. இந்த அனுபவங் களை ஒரு சாதாரண நிகழ்வாய் ஒதுக்கிவிட நாங்கள் தயாரில்லை.

மேலும் ஒரு சிறு கூரை அமைத்து விளக்கேற்றிய முயற்சி கோவிலாய் மலரும் சமயம், ஸ்வாமி சமர்த்தர் அங்கு பிரதான மூர்த்தியாக அமை யக்கூடிய அறிகுறியே துளியும் இருக்கவில்லை. அத்துடன் அந்த அமைப்பில் பூமிக்கு கீழ் தளத்தில் ஒரு தியானக்கூடம் கட்டுவதிலும் பெரிய அளவில் எதிர்ப்பு கிளம்ப, மஞ்சரி மிகவும் மன வருத்தம் அடைய, அடியேனும் சாய் சத்சரிதத்தை அணுகி பாபாவின் வழிகாட்டுதலை வேண்ட, எனக்கு பக்கம் 36 (அத்யாயம் 4) சுட்டிக் காட்டி பாபா ஆசீர்வதிக்க மஞ் சரியும் முடிவில் உறுதியடைந் தார். மஹா பெரியவர் வழிகாட்டு தலின்படி சமர்த்தர் பிரதானமாய் அமைந்தார். பின்னர் சமர்த்தர் விஸ்வரூப தரிசன் மூலம் நின்ற கோலத்தில் கோவிலின் அமைப்பு குறித்து தெரிவித்தார்.

எப்படிப்பட்ட வழி நடத்துதல் ஸ்வாமி சமர்த்தர், சாய்பாபா, மஹா பெரிவா என மகான்களின் துணையோடு, கொரோனா

காலத்திலும் கட்டிட வேலை நடக்க அங்கேயே தங்கி வேலை செய்ய திருமதி.கோமதி என்ற பெண்மணி குடும்பத்துடன் வேலை செய்தது மட்டுமின்றி, கட்டுமான பொருட்கள் வாங்க தன் சங்கிலியை அடமானம் வைத்து ரூபாய் ஒரு லட்சம் வங்கி கடன் பெற்று தந்து ஸ்வாமியின் பரிபூரண அன்பிற்கு பாத்திரமாகி அசத்தினார்.



மஞ்சரியின் குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவரும் அவருக்கு உறுதுணையாக அமைந்து சேவை செய்தது மிகப்பெரிய ஆச்சரியம். இதுவரை கண்டிராத கூட்டு முயற்சி. பூமி பூஜை செய்த அதே நாளில் ஒரு வருடம் கழித்து மார்பில் சிலா ரூபங்கள் குரு ஹோரையில் மஞ்சரி வீட்டுக்கு (குரு நிவாஸ் என்ற பெயரை ஆசீர்வதித்து) எழுந்தருளி பூஜை செய்யப்பட்டு கும்பாபிஷேகத்திற்கு வந்தனர். குறுகிய கால அவகாசத்தில் எல்லாம் நல்லபடியாகவே நிறை வேறியது.

இந்த அற்புத ஆன்மீக பணியில் ஏற்பட்ட ஆரம்ப கால தடங்கல்கள் எல்லாமே சவால்களை உடைத்தெறிந்து வெளிப்படும் பிரபஞ்ச பேராற்றலை நமக்கு உணர்த்தியது. நமது குண்டலினி யோகி ஸ்ரீராம் பாபா அவர்களும் அகஸ்டின், மற்றும் தொண்டர்களுடன் வந்திருந்து தியானம் செய்து ஆலயப்பணி சீறிய முறையில் நடைபெற வாழ்த்தி மஞ்சரி சாய்ராம் அவர்கட்கு ஆறுதல் வழங்கினார்.

கும்பாபிஷேகத்திற்கு திருமதி. மாதங்கி, பாலாஜி குடும்பத்துடன் வந்திருந்து கலந்து கொண்டதுடன் பொருளுதவியும் வழங்கினார். ஸ்வாமி சமர்த்த மஹராஜ் இன்றளவும் யாரெல்லாம் வர வேண்டும் என முடிவு செய்கிறாரோ அவர்களை எங்கிருந்தாலும் அழைத்து வந்து திருப்பணிக்கு உதவ வாய்ப்பு அளித்து ஆசீர்வாதித்தார்.

திரு. நாராயணன் (You Tube) அவர்கள் பங்களிப்பு உதவியுடன் பளிங்கு மூர்த்திகள் உத்திரபிரதேசத்திலிருந்து நேர்த்தியாக தயார் செய்யப்பட்டு வந்தது. மூர்த்திகளை செய்த சிற்பி இப்பணி நன்கு பூர்த்தியானதின் பலனாய் மிக விறு விறுப்பாக நிறைய ஆர்டர்கள் கிடைத்தது என்று நன்றி கலந்த பக்தியுடன் திரு. நாராயணனுடன் கும்பாபிஷேகத்திற்கும் வந்திருந்தார்.

வாய்ப்பு கிடைக்கும்பொழுது நீங்களும் மாருதிபுரம் ஸ்வாமி சமர்த்தர் கோவிலுக்கு வந்து தர்சனம் செய்ய வேண்டுகிறேன் நண்பர்களே. இக்கோரிக்கையுடன் குரு வாழ்க குருவருளே என்றும் எங்கும் நமக்கு துணை என்று தொடர்வோம்!

மீண்டும் சந்திப்போம்!

சிஷ்யனே, ஹேமலேகை என்பவளால் அந்த நாடே ஞான மார்க்கத்தை அடைந்தது. இதுவே சாதுசங்கத்திற்கான சிறந்த எடுத்துக்காட்டு, நாம் எங்கு லயிக்கிறோமோ அதையேபற்றி இறுதியில் நாமும் அதுவாகவே மாறிவிடுவோம் என்று குருநாதர் சிஷ்யனுக்கு உரைத்தார்.



வாழ்வியல் நெறிகாட்டும் மெய்ஞானம்

9

இதையே பகவான் ஸ்ரீரமண மகரிஷி, பின்வரும் பாடல் மூலம் தவத்தின் பெருமைதனை மிக அழகாக எடுத்துயியம்புகின்றார்.

தவங்களினாற் பாவந் தவிர்ந்த
வராய்ச் சாந்தி யவிர்ந்தவரா
யாசையறுந் தாராய்ப் பவமுக்தி
யாதரமார்ந் தாருக் கடையத்
தகுமான்ம போதமா மீது புகல்.

இறைத்தன்மையோடு நம்மை நெருங்கவிடாமல் பிரிப்பது நாம் செய்த பாபகாரியங்களே. பாபம் எனப்படும் ஒரு திரை, அது நம்மை இறைத்தன்மையை அடைய விடாமல் தடுக்கிறது. எப்போது நாம் செய்த பாபங்களானது குறைய ஆரம்பிக்கிறதோ அப்போதிலிருந்து இறைத்தன்மையை மறைத்துக் கொண்டிருக்கிற திரையானது கொஞ்சம் கொஞ்சமாக விலகுகிறது.

திரை விலக விலக நம்முள் இறைத் தன்மை கூடுகிறது, எப்போது இந்த பாபமானது முழுமையாக களையப்படுகிறதோ அந்த நிமிடமே நாம் இறைத் தன்மையாகிவிடுகிறோம். இதை அடைவதற்கு பலசாதனங்கள் இருக்கின்றது, அதில் மிக முக்கியமாக கருதப்படுவது "தவம்". தவத்தின் மூலமாகவே பாபத்தை முழுமையாக அகற்றமுடியும், இந்தத் தவத்தையும் மெய், மனம், மொழி என்ற மூன்றாலும் செய்யவேண்டும்.

மெய்யால் செய்யும் தவம் பிறருக்கு தீங்கிழைக்காமல் இருத்தல் மற்றும் ஆசனங்களை மேற்கொள்ளல். மனத்தால் செய்யும் தவம் நல்ல எண்ணங்களையே அசை போடுவது, நல்லதேயே நினைப்பது, எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துவது மற்றும் தியானம் மேற்கொள்ளுவது. மொழியால் செய்யும் தவம் உண்மையை பேசுவது, நல்லச் சொற்களை மட்டுமே பயன்படுத்துவது, கருணையோடு



நாராயணன்

மனிதவாழ்க்கையின் முக்கிய குறிக்கோள் மோக்ஷம் அடைவது மட்டுமே, அதனை அடையவிடாமல் தடுப்பது பற்று தல் மற்றும் பந்தமாகும். இந்தப் பற்றுதல், பந்தத்திலிருந்து விடுபட வேண்டுமென்ற தீராத தவிப்பு உள்ளவனே முமுக்ஷு என்ற ழைக்கப்படுகிறான். அதற்கான சுலபமான வழியே தவம், மௌனம், விசாரம் இதுவே நமக்கு இறுதியில் ஆத்மஞானத்தை அளிக்கின்றது.

எனதருமை சிஷ்யனே கேள், ஒரு கிளியானது வாமதேவ ரிஷிக்கு கீழ்கண்ட உபதேசத்தை வழங்கியது.

சித்துருவான ஆன்மாவை சேத்தியம் நீக்கிப் பாரீர், சித்தலாற் சேத்தியமில்லை திகழ் பளிங்குருவம் போலச் சித்ததே, சேத்திய மாகுஞ் சித்துநான் றானே யெல்லாஞ், சித்தினால் விளங்க லாலே சித்தொளி சுதந்தி ரந்தான்.

கண்ணாடியில் எப்படி பிம்பங்கள் பிரதிபலிக்கின்றனவோ, அதுபோல இந்த உலகத்தில் காணப் படும் காட்சிகள் அனைத்தும் சித்திலிருந்து பிரதிபலிக்கப்பட்ட வைகளே. பிம்பத்தை பார்க்கும் மனிதன் கண்ணாடியைப் பார்க்கத் தவறுகிறான், பிம்பத்தை நீக்கும்போது எப்படி கண்ணா டியானது அவனுக்கு தெரிகிறதோ! அதுபோல உலகக்காட்சிகளை நீக்கிப் பார்க்கும்போது சித்து மட்டுமே காணப்படும்.

கண்ணாடியில்லாமல்

பேசுவது மற்றும் மூச்சுப்பயிற்சியை மேற்கொள்ளுவது.

இதுவே தவம் செய்யும் முறை யாகும், இத்தகைய தவத்தால் நாம் நிலையான அமைதியையும், நிரந்தர பேரின்பத்தையும் அடைந்து இறைத் தன்மையை அடைய முடியும். இதுவே நாம் வினைகளை களைய, பாபத்தை கழுவ ஓர் எளிய வழியாகும்.

நம் வினைகளாகிய பாபங்கள் விலகுகின்ற நேரத்தில்தான் ஒருவ னுக்கு மனஅமைதி ஏற்படுகிறது. மனமானது அமைதியுறுகின்ற தருணமே ஆத்மஞானம் ஒளிர் விடுவதற்கான சரியான நேர மாகும். ஒருவனை வினைகளை செய்யத் தூண்டுவது எது? நம்மிடமுள்ள விருப்பு மற்றும் வெறுப்பு ஆகும், பொருள்களின் மேலுள்ள பற்றுதலின் காரணமாக நம்மனமானது தீய செயல்களைச் செய்யத்தூண்டுகிறது.

பிரதிபலிப்பு இல்லை, அதுபோல சித்தொளியில்லாமல் காட்சிகள் இல்லை. காண்பவன் இல்லாமல் எப்படிக் காட்சிகள் சாத்தியமாகும்? எல்லாம் சித்தே! நானும் சித்தே! நீயும் சித்தே! "சித்தொளியாலே எல்லாம் பிரகாசிக்கின்றன" அதனால் சித்தொளி சுதந்திரமானவன். இங்கு சித்தொளியே ஆன்மா.

சிஷ்யன், குருதேவரை நோக்கி கீழ்கண்டவாறு வினவினான்,

"குருதேவா! ஹேமஸுடன், தன் மனைவியான ஹேமலேகை மூலமாக ஞானமடைந்த வரலாற்றை கேட்டேன், அதில் எனக்கு சில சந்தேகங்கள் எழுகின்றன" என்றான். இதை கேட்ட குருநாதர், "என்ன உன் சந்தேகம் கேள் மகனே! விசார மனமே குழம்பிய குட்டைக்குத் தெளிவு" என்றார்.

சிஷ்யன், என்னதான் அறிவுரை வழங்கினாலும் நாம் காலகாலமாக வாழ்ந்துவந்த பாவனை எப்படி உடனடியான மாற்றத்தை அடையும்? இந்தயிடத்தில் எனக்கு சற்றே புரிதல் ஏற்படவில்லை! என்றான். குருநாதர் சீடனை நோக்கி, "மகனே! நல்ல கேள்வி, மனமானது எளிதில் மாறக்கூடியது அல்லதான், அப்படியே தெளிந்தாலும் மீண்டும் அதில் கசடுகள் ஏற்படலாம். இதே கேள்விதான் ஹேமசூடனின் மனதிலும் இருந்தது, ஸ்ரீகுரு தத்தாத்திரேயர், பரசுராமனுக்கு கூறிய ஞானத்தை தொடர்கின்றேன் கவனத்தோடு கேட்பாயாக" என்றார்.

குருதேவர் கூறத்தொடங்கினார், இவ்வாறாக, ஹேமலேகை கூறிய ஞானவசனங்களை கேட்டு ஹேமஸுடன் சுகபோக வாழ்க்கையிலிருந்து சற்றே விலகி தியானம், தவம் போன்ற ஞான மார்க்க போதனைகளின்படி பயணிக்கத் தொடங்கினான். ஆனால், அரசனாக வாழ்ந்த அவனுக்கு ராஜபோகங்களை துறப்பதென்பது சற்றே கடினமாக இருந்தது. எப்போதெல்லாம் போக எண்ணங்கள் மேலோங்குகின்றதோ, அந்நேரங்களிலெல்லாம் ஹேமலேகை கூறிய ஞானவாசகங்களை நினைவு கூர்ந்து அந்த எண்ணங்களையே அருவருத்து அவற்றிலிருந்து விலகியிருந்தான். இருந்தாலும், அவனால் முழுமையாக மாறமுடியாமல் மனமானது ஊசலாடியது.

இப்படியாக, ஹேமஸுடன் இந்த விசனத்தை ஹேமலேகையிடம் கேட்கவும் வெட்கமடைந்தவனாய் மனதிற்குள்ளேயே மருகியபடி உடல்மெலிய ஆரம்பித்தான். அவனது கன்னங்களில் குழிவிழத் தொடங்கியது, கண்கள் உள்ளடக்கியது, நிறம் மாறியது, உணவு உண்ணவும் மனமில்லாதவனாய் எதையோ பறிகொடுத்தவனை போலக் காணப்பட்டான்.

ஹேமசூடனின் உடலின் மாற்றங்களை கவனித்த ஹேமலேகை, அவனை நோக்கி "ராஜகுமாரரே என்ன ஆயிற்று? நீங்கள் முன்பிருந்தபடி மகிழ்ச்சியாக இருப்பதில்லை, எப்போதும் கவலையுடன் காணப்படுகிறீர்கள். உங்களின் உடல் மாற்றங்களை காணும்பொழுது அது வியாதியால் பீடிக்கப்பட்டதை



போல் தோன்றவில்லையே! போகங்களினால் வாதம், பித்தம் மற்றும் கபம் போன்ற உடல்வாகில் மாற்றம் ஏற்பட்டு உடலானது நோய்வாய்ப்படலாம். ஆனால், உங்களுக்கு இருப்பதோ மனரீதியான பிரச்சனைப் போல் எனக்குத் தோன்றுகிறது! அதன் காரணம்தான் என்ன? மருந்தினால் சரியாகும் ரோகம்போல் தோன்றவில்லை!" என்று வினவினாள்.

தன் மனைவியின் பரிவான வார்த்தைகளை கேட்ட ஹேமஸுடன், "அன்பானவளே! நீ எனக்குக்கூறிய ஞானோபதேசங்களை கேட்ட பிறகு என்னால் இயல்பான வாழ்க்கை வாழமுடியவில்லை. எனக்கு ராஜபோகங்களை அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும் போதெல்லாம் உன்னுடைய உபதேசமொழிகள் என்னிடம் மேலோங்கி என்னை அலைக்கழிக்கிறது, முன்பு எதையெல்லாம் சுகம் என்று நினைத்தேனோ அவையனைத்தும் துக்கத்திற்கு காரணம் என்றாய், அதுவும் எனக்கு நியாயமாகவே தெரிகிறது, இவற்றால் எந்த சுகத்தையும் கொடுக்கமுடியும் என்ற நம்பிக்கையும் எனக்கில்லை." என்றான்.

மன்னனால் தண்டனையளிக்கப்பட்ட ஒருவனுக்கு எப்படி தண்டனை நிறைவேற்றும் முன்னால் எப்பேர்ப்பட்ட ராஜபோகங்களும் சுகத்தையளிக்காதோ, அதுபோல எந்த ஒரு போகங்களும் எனக்கு சுகத்தையும், இன்பத்தையும் அளிக்கவில்லை.

ஏனென்றால், என்னால் விஷயசுகங்களை தியாகம் செய்ய முடியாமல் கர்மவாசனையினால் ராஜகாரியங்களை செய்துவருகிறேன். எல்லாவற்றையும் நீக்கி நிலையான சுகமாகிய ஆத்மஞானப் பாதையில் பயணிக்கமுடியாமல் நடுவில் நிற்பதினால் எனக்கு என்நிலையானது பெரும்பாரமாக இருக்கின்றது. எப்படி என்னால் இதனிலிருந்து மீள்வது என்று அறிய முடியவில்லை தேவி" என்றான்.

தன் கணவரின் மனநிலையினை யறிந்த ஹேமலேகை, சற்றே சிந்தித்து அவரிடம் வைராக்கியம் வலுப்பெறுவதை தெரிந்து கொண்டாள். ராஜகுமாரனின் தடுமாற்றமானது அவனது ஞானத்தின் விதையென்பதை தெரிந்து கொண்ட ஹேமலேகை, தன் கணவனுக்கு ஞானவிதைக்கான உரத்தை தெளிக்க எண்ணி தன்னிடமுள்ள ஞானஒளியை மறைத்துக் கொண்டு, ஒரு கதையின் மூலமாக அவனுக்கு ஆத்மா, ஜீவன், அந்தக்கரணங்கள், ஐம்புலன்கள், விஷயசுகம், உலகப்பற்று முதலியவற்றை விளக்க விரும்பினாள்.

தொடரும்



சாய்சரிதம்-22

கதை வடிவில்

எனது கதைகளை உங்களது உள்ளத்தில் பதிவேற்றுங்கள். ஒவ்வொரு கதையும் தரும் குறிப்பு நுட்பத்தை நன்றாகப் பிடித்துக் கொள்ளுங்கள். அதனால் உங்களது மனத்தின் பதை பதைப்பு மறைந்து தொழியும். உங்களுக்கு உண்மையான சாந்தியும் அமைதியும் கிடைக்கும். எனது கதைகள் உங்களுக்கு உண்மையான வழியைக் காட்டி ஆசீர்வதிக்கும்.

மனிதனின் ஆன்மா உண்மையிலேயே ஸத்துவம், ராஜஸம், தாமஸம் என்று மூன்று குணங்களுக்கு அப்பாற்பட்டே இருக்கின்றது. ஆனால் மனிதன் இவ்வுலகத்தின் அசையும், அசையாத பொருட்களால் ஏற்படும் மாயையால் மறைக்கப்பட்டு, தன்னுடைய இயல்பான இறைநிலையை மறந்து, தன்னைச்சுற்றி நடப்பவை அனைத்தும் தன்னால்தான் நடக்கின்றது என்ற மமதையில் சிக்கிக்கொண்டு உழல்கின்றான். இதிலிருந்து விடுவித்துக் கொள்ளும்

வழியும் அவனுக்குத் தெரியவில்லை. தெரிந்தவர்கள் கூறினாலும் ஏற்றுக் கொள்ளும் பக்குவமும் அவர்களுக்கு இருப்பதில்லை.

குரு பக்தி மட்டும் தான் என்ற அகங்காரத்தில் இருந்து தன்னை விடுவித்துக்கொள்ளும் ஒரே வழி என்பது அவனுக்குப் புரிவதில்லை. முன்னரே குறிப்பிட்ட காரணங்களான நான் என்ற அகங்காரத்தின் விளைவாகவே சாயிபாபா என்ற சற்குருவை நாம் ஓர் அவதாரமாகவே கருதுகின்றோம். ஆனால் சாயி தான் கடவுளின் பணிவுள்ள சேவகன் என்றே எப்போதும் கூறினார்.

இருப்பினும் சாயி தான் கடவுளின் பிரதிநிதியாகவே, மக்கள் எங்கனம் தனக்கும், பிறருக்கும் திருப்தியான வகையில் நடந்து கொள்ள வேண்டும். எப்படி தனது தார்மீக கடமைகளை செய்துவர வேண்டும் என்று வாழ்ந்து காட்டினார். அவர் ஒருபோதும், எந்த வகையிலும், மற்றவர்களுடன் போட்டி போட்டு தனது கருத்தையோ, முயற்சியையோ வெளிப்படுத்தியதில்லை.

இவ்வுலகின் அசையும், அசையாத பொருட்கள் அனைத்திலும் கடவுளைக் கண்ட அவரிடம் பணிவுடைமையையே நாம் பெரிதும் காண்கின்றோம். அவர் ஒருவரையும் புறக்கணித்ததோ, மதிக்காமலோ இருந்ததில்லை. சர்வ வல்லமையுடைய கடவுளை அவர் அனைத்து சீவராசிகளிடமும் கண்டார். "நான் கடவுள்" என்று அவர் ஒருபோதும் சொன்னதில்லை. ஆனால் தான் ஒரு பணிவுள்ள சேவகன் என்றும், எப்போதும் அவரது நினைவிலேயே

– வே.ஸ்ரீராம்

இருப்பதாகவும் கூறினார். எனவே தான் "இறைவனே எஜமானன்" (அல்லா மாலிக்) என்று அடிக்கடி உச்சரித்தார்.

இவ்வுலகினில் மாகாத்மாக்களாக தன்னையறிந்து கொண்ட பின், அறியாமையால் பிணைக்கப்பட்ட ஆன்மாக்களை விடுவிப்பதற்காக, கடவுள் அருளால் தம்மையே அவதரித்துக் கொள்கின்றார்கள். நல்வினைகளின் சேமிப்பு கொஞ்சமாவது நம்மிடம் இருக்குமானால், மகாத்மாக்களின் கதைகள், அல்லது லீலைகளைக் கேட்பதற்கு நமக்கு ஆர்வம் ஏற்படும். இல்லை என்றால் ஆர்வம் ஏற்படாது.

எனவே இவ்வத்தியாயத்தின் கதைகளுக்குத் திரும்புவோம்.

ஒரு முறை பதஞ்சலியின் யோக சாஸ்திரம் உட்பட அனைத்து யோகப் புத்தகங்களையும் திறம்படக் கற்றறிந்த ஒரு யோக சாதகர், தன்னால் சாஸ்திரத்தில் கூறியபடி ஒரு நிமிடம்கூட மனதை ஒருமுகப்படுத்தவும், சமாதி நிலையை அடையவும் முடியவில்லை என்பதை உணர்ந்துகொண்டு, அதற்காக தகுந்த ஒரு குருவைத் தேடிக்கொண்டிருந்தார்.

அதுசமயம், நானாசாகேப் சாந்தோர்கரின் வழிகாட்டலின்படி அவருடன் இணைந்து சாயி பாபாவை தரிசிக்க சீரடிக்கு வந்தார். நானாவுடன் அவர் மசூதிக்குச் சென்ற போது, பாபா ரொட்டியை பச்சை வெங்காயத்துடன் சேர்த்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார். இதைக்கண்ட யோக சாதகரின்

மனதிற்குள், மக்கிப்போன ரொட்டியை பச்சை வெங்காயத்துடன் உண்டு கொண்டிருக்கும் இம்மனிதர் எப்படி எனது சந்தேகங்களை தீர்த்து எனக்கு ஞானம் கொடுக்க முடியும் என்று நினைத்தார்.

அவரது உள்ளத்தை அறிந்த பாபா, நானாவைப்பார்த்து, "ஓ நானா, பச்சை வெங்காயத்தை ஜீரணிக்கும் ஆற்றல் உள்ளவன் மட்டுமே அதை உண்ண வேண்டும் மற்ற ஒருவரும் அங்ஙனம் செய்யக் கூடாது". என்று கூறினார். இவ் வார்த்தைகளைக் கேட்ட யோக சாதகர், பாபா தான் உள்ளத்தில் நினைத்ததை உடனடியாக அறிந்து கொண்டு பதில் கொடுத்ததை அறிந்து ஆச்சர்யத்தால் செயலிழந்தார்.

எனவே ஒரு கணம்கூட தாமதிக்காமல் பூரண சரணாகதியுடன் பாபாவின் பாதங்களில் வீழ்ந்து பணிந்தார். எந்தவித அகங்காரமும் இன்றி தனது சந்தேகங்களை பாபாவிடம் தெரிவித்து பாபாவிடம் விடைகளைப் பெற்றார். பின்பு மிகுந்த தெளிவோடு, மகிழ்ச்சியாக பாபாவிடம் உதி பிரசாதம் பெற்று சீரடியில் இருந்து விடைபெற்றார்.

இக்கதையில் இருந்து ஒன்றை நாம் நன்றாக அறிந்து கொள்ள வேண்டும். நமது சீவனை இரண்டு கிளிக்கு ஒப்பிடலாம். ஒரு கிளி நமது உடலுக்குள்ளும், மற்றொன்று கூண்டிற்குள்ளும் கட்டுப்படிருக்கின்றன. ஆனால் அவை இரண்டு கிளிகளும் தம்முடைய நிலையே மிகச்சிறப்பானது என்று நம்பிக் கொண்டிருக்கின்றன. அங்கனமே அறிவு பெற்ற நாம் அனைவரும் நம்பிக் கொண்டிருக்கின்றோம்.

ஆனால் அவ்விரண்டு கிளிகளுக்கும் கடவுளின் அருளால் குரு என்பவர் வந்து அவைகளின் ஞானக்கண்களைத் திறந்து அவைகளின் கட்டுக்களை விடுவிக்கும் போதுதான், அவைகளின் கண்கள் உண்மையைப் பார்க்கத் தொடங்கும். தான் உண்மையை பார்க்கத்தொடங்கியதில் இருந்து என்ன அனுபவம் ஏற்படுகின்றதோ அதையே விசாரணை செய்து தன்னை ஆன்ம விசாரத்தில் உட்படுத்திக்கொண்டு ஆன்ம முன்னேற்றம் அடைய வேண்டுமே அன்றி, தான் ஞானம் அடைந்துவிட்டதாக கருதிக்கொண்டு அடுத்தவரை குறைத்து மதிப்பிட்டால் அவை சூன்யமே ஆகும்.

ஒரு முறை சாமாவை பாம்பு ஒன்று கடித்து விட்டது. பாம்பின் விசம் அவரது உடல் முழுக்கப் பரவத் தொடங்கிவிட்டது. சாமாவும் வலி தாங்கமுடியாமல் தான் இறந்துவிடுவோம் என்று நம்பத்தொடங்கி விட்டார். அப்போது அவரது நண்பர்கள் இம்மாதிரி பாம்புக்கடிக்கு சிகிச்சையாக விரோபா என்ற கடவுளிடம் எடுத்துச் சென்று முறையிடுவது வழக்கம் என்பதால் சாமாவை விரோபா கோவிலுக்கு எடுத்துச் செல்ல விரும்பினர். ஆனால் சாமா தான் நம்பும் தனது விரோபாவான சாயிபாபாவிடம் தன்னை அழைத்துச் செல்லும்படி கூறினார்.

எனவே அவரது நண்பர்கள் அவரை சாயிபாபாவிடம் அழைத்து வந்தனர். ஆனால் தூரத்தில் இருந்தே அவரைப் பார்த்த பாபா



கடுமையான வார்த்தைகளால் திட்டத் தொடங்கினார்.

"ஓ கீழ்தரமான பார்பானே! மசூதியின் படிகளில் ஏறாதே! ஏறினால் தொலைந்தாய் இறக்கு கீழே" என்று கர்ஜித்தார். மேலும், மேலும் கோபமடைந்த பாபா "போ அப்பாலே போ, கீழே இறங்கு" என்றார்.

பாபாவின் சீற்றத்தைக் கண்ட சாமா ஏமாற்றம் அடைந்தார். தன் நண்பர்கள் விரோபா கடவுளிடம் அழைத்த போதும் அதைத் தவிர்த்து எனது விரோபா பாபாவே என்று நம்பி வந்ததற்கா இந்த தண்டனை என்று நினைத்தவர், தனது ஒரே அடைக்கலமாக தான் நம்பியவரே தன்னை விரட்டினால் எங்குபோவது என்றபடி உயிர் வாழ்வதின் நம்பிக்கையை இழந்து அமைதியாக நின்றார் சாமா.

சற்றுநேரத்தில் பாபா சாந்தமானார். அப்போது சாமா அமைதியாகச் சென்று பாபாவின் அருகில் அமர்ந்தார். அவரை கணிவுடன் ஏறிட்டுப் பார்த்த பாபா, "பயப்படாதே! எள்ளவும் கவலைப் படாதே! கருணையுள்ள பக்கிரி உன்னைக் காப்பாற்றுவான். போய் வீட்டில் அமைதியாக அமர்ந்திரு. வெளியில் எங்கும் செல்லாதே! என்னை நம்பு என்று கூறினார். சாமாவும் அமைதியாகவும், நம்பிக்கையாகவும் வீட்டிற்குச் சென்றார்.

பிறகு பாபா, தாத்யா பாடீலையும், காகா தீட்சித்தையும் அழைத்து அவர் எதை விரும்புகின்றாரோ அதை சாப்பிடச் சொல்லுங்கள், அவரை இரவு முழுவதும் தூங்க விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். அவரை நடந்து கொண்டே இருக்கச் சொல்லுங்கள் என்று கூறி சாமாவின் வீட்டிற்கு அனுப்பி வைத்தார்.

பாபா கூறியது அனைத்தும் பின் பற்றப்பட்டன. சிறிது நேரத் திலேயே சாமா குணப்படுத்தப்பட்டார் என்பதை கூறவும் வேண்டுமா? போ அப்பாலே! கீழே இறங்கு என்பது சாமாவிற்கு கூறப்பட்டதல்ல. அவை சாமாவின் உடலுக்குள்ளே ஏறிய பாம்பின் விசத்திற்கு இடப் பட்ட கட்டளைகளாகும். தன்னை முழுமையாக நம்பும் பக்தர் களை காக்க பாபாவிற்கு புறப் பொருட்களான, மந்திர உச்சாடனமோ, தண்ணீரோ, வேப்பிலையோ, மருந்துப்பொருட்களோ எதுவுமே தேவையில்லை. அவரது சொற் களே போதுமானது என்பதை உணர்ந்து கொள்பவன் பாக்கிய சாலிகள் என்பதில் சந்தேகமே யில்லை.

ஒருமுறை சீரடியில் காலரா தாண்டவமாடியது. ஊர் மக்கள் மிகவும் பயந்துபோய் வெளி மக்கள் தொடர்பை எல்லாம் நிறுத்திக் கொண்டனர். பஞ்சாயத்தார் கூடி காலரா மேற்கொண்டு பரவாமல் இருக்க இரண்டு கட்டளை இட்டனர். ஒன்று, எவ்வித விறகு வண்டியும் ஊருக்குள் வரக்கூடாது. இரண்டு, ஊருக்குள் ஒரு ஆட்டைக் கூட வெட்டக்கூடாது. மீறினால், அபராதம் விதிக்கப்படும் என்று அறிவித்தனர்.

இவை இரண்டு கட்டளைகளும் மூடநம்பிக்கைகள் என்பதை அறிந்தவராதலால் பாபா அந்தக் கட்டளைகளை சட்டை செய்யவில்லை. அப்போது ஒரு விறகுவண்டி ஊருக்கு வந்தது. ஊருக்குள் எரி பொருள் தட்டுப்பாடு அதிகமாக இருந்தது தெரிந்தும் ஊர் மக்கள் அந்த விறகு வண்டியை ஊருக்குள் வர விடாமல் துரத்தினர். பாபா அவ்விடத்திற்குச் சென்று வண்டியை மசூதிக்குள் ஓட்டிவரும்படி கூறினார்.

பாபாவின் செய்கைக்கு ஒருவரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. பாபாவிற்கு துனிக்கு விறகு தேவைப்பட்டதால் ஒரு வண்டி விறகையும் வாங்கி மசூதியில் அடுக்கிவைத்தார். அக்னிஹோத்திரி ஒருவர் தனது புனித நெருப்பை தன் வாழ்நாள் முழுவதும் அணையவிடாமல் இரவும் பகலும் எரியவிடுவார். அதற்காக பாபா விறகை எப்போதும் சேமித்து வைத்திருப்பார்.

பாபாவின் வீடான மசூதி எப்போதும் அனைவருக்காகவும் திறந்தே இருக்கும். அதற்குப் பூட்டோ சாவியோ கிடையாது. ஆகையால் பாபா சேமித்து வைத்த விறகை சில ஏழை மக்கள் தங்களது தேவைக்காக எடுத்துச் சென்றனர். பாபா இதைக் கண்டு கோபப்படவோ, முணுமுணுக்கவோ இல்லை. பிரபஞ்சம் முழுவதும் கடவுள் வியாபித்திருப்பதை அவர் கண்டார். எல்லா பொருட்களிலுமே பாரபட்சமின்றி கடவுளையே அவர் கண்டதனால் அவர் யாரிடமும் பகையோ, கெட்ட எண்ணமோ கொண்டதில்லை. எனவே பாபா எல்லாவற்றையும் துறந்து துறவிபோல் வாழ்ந்தாலும், மக்களுக்கு முன் உதாரணமாக இருக்கும் பொருட்டு இல்லறத்தார் போன்று வாழ்ந்தார். இவ்விதம் முதலாவது காலரா கட்டளையை பாபா மீறியதன் மூலம் மக்களின் தேவையை நிறைவேற்றினார்.

இரண்டாவது கட்டளையான ஆட்டை வெட்டக்கூடாது என்



பதை பாபா எப்படி குருபக்தியை சோதிக்க பயன்படுத்தினார் என்பதை காண்போம். ஒரு நாள் யாரோ ஒருவர் இறக்கும் தருவாயில் இருக்கும் ஆட்டை மசூதிக்கு கொண்டுவந்தார். அந்த ஆடு மிகவும் வயதானதாகவும், பலவீனமாகவும் இருந்தது. அப்போது பாபா, தன் அருகில் இருந்த படேபாபாவை நோக்கி, இந்த ஆட்டை ஓரே வெட்டில் பலியிட்டு தன்னிடம் கொடுக்கும்படி கூறினார்.

படேபாபா என்பவர், பாபாவை மிகவும் மதிப்பவர். அவர் எப்போதும் பாபாவின் வலது புறத்திலேயே அமர்ந்திருப்பார். ஹூக்காவை அவர் முதலில் பிடித்தபின்பே பாபாவும் மற்றவர் களும் பிடிப்பார்கள். பாபா தினந்தோறும் அவருக்கு ஐம்பது ரூபாயை அளித்துவந்தார். பெரும் பாலும் மதிய உணவை படேபாபா வுடன் இணைந்தே உண்டார். அப்படி இருந்தும், பாபா அவரிடம் ஆட்டைவெட்டும்படி கூறியும் அவர் தன்னால் முடியாது என்று திட்ட வட்டமாக மறுத்து விட்டார்.

பின்னர் பாபா, சாமாவை ஆட்டைக் கொல்லும்படி கேட்டுக் கொண்டார். சாமா இராதா கிருஷ்ணாயிடம் கத்தி கேட்டார். விபரம் அறிந்து கொண்ட இராதா கிருஷ்ணாயி கத்தியை தரமாட்டேன் என்று கூறிவிட்டாள். சாமா கத்தி வாங்கி வருவதாகக் கூறிவிட்டு, தீக்ஷித் வாடாவில் சென்று தங்கி விட்டார். அடுத்தது காகா சகேப்பின் முறை வந்தது. காகா சாகேப் உண்மையான சீடன்தான் இருப்பினும் சோதிக்கப்பட வேண்டும் அல்லவா? பாபா காகாவிடம் கத்தியை வாங்கிவந்து ஆட்டை கொல்லும்படி கூறினார்.

காகாசகேப்பும் கத்தி ஒன்றை ஏற்பாடு செய்து கொண்டு வந்து தனது இடுப்பு வேட்டியை இருக்கிக் கட்டிகொண்டு, பாபாவின் உத்தரவிற்காக காத்திருந்தார். பிராமணக்குடும்பத்தில் பிறந்த அவருக்கு கொலையைப் பற்றி ஏதும் தெரியாது. ஆயினும் பாபா வின் உத்தரவிற்கு தயாரானார். அதைக்கண்ட மக்கள் இஸ்லாமிய ரான படேபாபா ஆட்டைக்கொல்ல மறுத்தபோதும், ஒரு பிராமணரான காகாசகேப் துணிந்து ஆட்டைக் கொல்ல தயாராகிவிட்டதைக் கண்டு ஆச்சர்யப்பட்டனர்.

காகா சாகேப் கையில் கத்தி யுடன் பாபாவை ஏறிட்டடுப் பார்த்தார். உடனே பாபா, "எதை நினைத்துக்கொண்டு நிற்கின்றாய்! உம்! வெட்டு" என்றார். காகா ஆட்டை வெட்டுவதற்கு கத்தியை உயரத்தி கீழே இறக்கினார். அந்த நேரத்தில் பாபா,

"நிறுத்து நீ எவ்வளவு கொடுமைக் காரனாக இருக்கின்றாய்" பிரா மணனாயிருந்து கொண்டு ஒரு உயிரைக் கொல்ல துணிந்து விட்டாயே! என்றார்.

உடனே காகா பாபாவின் சொல்லுக்கு கீழ்படிந்து கத்தியை அவரது காலடியில் வைத்துவிட்டு, அமிர்தத்தை ஒத்த உங்களது சொல்லே எங்களுக்கு சட்டமாகும். அதைத்தவிர எங்களுக்கு வேறு எதுவும் தெரியாது. கொல்வது சரியா, தப்பா என்பது எங்களுக்குத் தெரியாது. உங்கள் முன் நடப்பவற் றுக்கான காரணத்தை ஆராயவோ,

விவாதிக்கவோ நாங்கள் விரும்ப வில்லை. ஆனால் குருவிற்கு கீழ்படிதலே எங்களது கடமையும், தர்மமும் ஆகும் என்றார்.

அதன்பின்னர் பாபா, அவரிட மிருந்த கத்தியை பெற்றுக்கொண்டு, ஆட்டை தாமே பலியிடுவதாகக் கூறி, ஆட்டை வெட்ட முற்படுகை யில் ஆடு தாமே கீழே விழுந்து இறந்து போனது. இச்சம்பவத்தை நான் நேரில்பார்த்தபோது,சீடர்கள்மூன்று தரமாக இருப்பதாகத் தோன்றியது. முதல் தரமானவர்கள் குரு என்ன விரும்புகிறார் என்பதை ஊகித்த றிந்து உடனே அதை நிறைவேற்றி வைப்பவர்கள். இரண்டாம் தரமான வர்கள், குருவின் கட்டளை களுக்கு தாமதமின்றி கீழ்படிப வர்கள். மூன்றாம் தரமானவர்களோ, குரு கட்டளை இட்டபின்னும், அது சரியாக வருமா என்று சந்தேகப் பட்டுக்கொண்டு குருவிடமே அது சரியாக வருமா என்று கேள்வி கேட் டுக்கொண்டும் இருக்கின்றார்கள்.

அறிவுக்கூர்மையையும், உறுதி யான நம்பிக்கையையும், பொறுமை யும் சீடர்கள் பெற்றிருக்க வேண்டும். மூச்சுக்கட்டுப்பாடு, ஹட யோகம், போன்ற கடினப்பயிற்சிகள் எதுவும் தேவையே இல்லை. குருவின் கண் அசைவிற்கு கீழ்படுபவனும், தனக்குப்பிடித்தமாக குருவை மாற்ற நினைக்காதவனும் பெறும் பேறு பெற்றவர்கள். அவர்களை குரு முழு நிறைவுக்கு வழிநடத்துவார்கள்.

(தொடரும்)

"உறுதிப்பாடு"

"நிலைத்த உறுதிப்பாடே" நமக்கு வர வேண்டிய குணம், அந்த இறை குணம் எழுந்து விட்டால் செய்யும் காரியம் சீராகவும் செம்மையாகவும் திகழும். மனநிலை சீராக ஒரே விதமாக திகழ்வதற்கு இந்த இதய உறுதிப்பாடு மிகவும் அவசியப்படுகிறது! அதற்காகவே இதய சக்கரத்தில் கவனம் குவித்து தியானிக்க வேண்டும். இதய பாரங்கள் தியானம் செய்யச் செய்ய விலகிவிடும். தியானத்தை போல் இதமான பேராறுதலை யாராலேயும் தர இயலாது!



பழைய நினைவுகள் நெஞ்சை பிடித்து உலுக்கு கிறதா? இதயச் சக்கரம் பலவீனமாக இருக்கிறது என்று பொருள்! அந்த இதய பலவீனத்தை தியானத்தால் மட்டுமே சரிசெய்ய முடிகிறது! அதைத்தவிர வேறு உபாயம் இல்லை! புருவ மத்தியில் கவனம் குவித்து தியானித்தால் உள்ளொளி தரிசனம், மகான்கள் தரிசனம், மெய்ப் பொருள் யாவையும் காணலாம்! அந்த மூன்றாவது கண் புருவ மத்தியில் தான் உறங்கிக் கொண்டிருக்கிறது!

ஆக்ஞா சக்கரம் விழிக்கிற நொடி யில் மூன்றாவது கண்ணும் திறக்கிறது!

அதுவே ஆன்மீகத்தின் நுழைவு வாசல் எனப்படும். ஒரு சரியான குருவை தேர்ந்தெடுப்பதன் மூலம் இக்கலையை முறையான பயிற்சியின் மூலம் அறிந்து கொண் டால் நீங்கள் யார் என் பதையும், இங்கு எதற்கு வந் தீர் கள்? என் ன செய்து கொண்டிருக்கின் றீர்கள்? எங்கு போகப் போகின்றீர்கள் என்பதை யும் அறிந்து கொள்ளலாம்.



ஆலய நிர்வாகி, திரு. உத்ய நாயகம் மற்றும்,
இலங்கை எம்.பி திரு. ஜீவன் தொண்டைமான்
குடும்பத்தினருடன்

இலங்கையில் சத்சங்கம் மற்றும் மௌனம்

திரு. எஸ்.ஆர்.பாலாஜி

அனைவருக்கும் என் பணிவான வணக்கங்கள்,

இது குருவுடன் இணைந்து செல்லும் என்னுடைய இரண்டாவது இலங்கை பயணம். எட்டு வாரதியான பயிற்சிக்கு பின்னர் "மௌனத்தின் மூலம் தவம்" நிகழ்ச்சிதான் இந்த பயணத்தின் முக்கியமான நோக்கம். சென்ற முறையை விட இம்முறை மௌனத்தில் கலந்து கொள்ள பலர் ஆர்வம் காட்டினர். இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் திரு.ரவி அவர்கள் செய்திருந்தார்.

திரு.ரவி அவர்களின் சேவை அளப்பரியது. மௌன நிகழ்ச்சி மற்றும் இரண்டு இடங்களில் சத்சங்கத்திற்காக ஏற்பாடு செய்ததோடு மட்டுமல்லாமல், தனிப்பட்ட முறையில் குருவை சந்தித்து ஆசி பெற ஏதுவாக நேரம் ஒதுக்கி சீராக ஏற்பாடுகளை செய்திருந்தார்.

இந்த பயணம் நவம்பர் மாதம் 16ஆம் தேதிதான் ஊர்ஜித மானது. அன்று நான் எப்போதும் டிக்கெட் பதிவு செய்யும் இண்டிகோ விமானத்தின் கட்ட



ணத்தை பார்த்தபோது, சராசரி கட்டணத்தைவிட அதிகமாக இருந்தது. அதனால் நான் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் இல் டிக்கெட்டை பதிவிட்டேன். அப்போது இண்டிகோ சேவையில் எந்தவித குழப்பமும் இல்லை.

ஆனால் திடீரென டிசம்பர் மாதம் 5ஆம் தேதி முதல் இண்டிகோ விமான சேவையில் குழப்பம் ஏற்பட்டதோடு மட்டுமல்லாமல், நாங்கள் பயணம் செய்த சமயத்தில் இலங்கைக்கான இண்டிகோ சேவை ரத்தாகியிருந்தது. குருவின் அனுக்கிரஹம்தான் என்னை இவ்வாறு வழிநடத்தியது என்பதை நான் பின்னர் உணர்ந்து கொண்டேன்.

திட்டமிட்டபடி டிசம்பர் 18 ஆம் தேதி நானும் குருவும் கொழும்பு சென்றடைந்தோம். மதியம் சில அன்பர்களை சந்தித்த பின்னர் குரு அவர்கள் கொழும்பு புதுச்செட்டித் தெருவில் அமைந்துள்ள சாயி நிலையத்தில் சத்சங்கம் நிகழ்த்தினார்கள். கோவிலின் அறங்காவலர் திரு. உலகநாயகம் ஐயா அவர்கள் குருவை வரவேற்று கௌரவித்தார்கள்.

குரு அவர்கள் எப்போதும்போல தனக்கே உரிய பாணியில் 'சத்குரு சாயிபாபாவைப் பற்றியும் பாபா வாழ்ந்து காட்டியது மூலம் நாம் அனைவரும் கற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டியவை' பற்றியும் எல்லோருக்கும் புரியும் வண்ணம் எடுத்துரைத்தார்கள். பின்னர் அங்கிருந்த அனைவரையும் குரு அவர்கள் தியானம் செய்ய வைத்தார்கள்.



ஸ்ரீ லஷ்மி மனித புனர்வாழ்வு மையம், கொழும்பு.

இறுதியாக, நன்றியுரை வழங்கிய திரு.உலகநாயகம் ஐயா அவர்கள் குரு பேசிய அனைத்தும் தற்காலத்திற்கு தேவையான அறிவுரை என்றும் அனைவரும் கட்டாயம் பின்பற்ற வேண்டும் என்று கூறியதோடு மட்டுமல்லாமல், தொடர்ந்து இலங்கைக்கு வந்து இது போன்ற சொற்பொழிவுகளை நிகழ்த்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். குரு அவர்கள் இலங்கையில் பேசியதை 'Youtube Live' மூலம் உலகம் முழுவதுமுள்ள அனைவரும் கண்டு ரசித்தனர். இரவு பாபா பல்லக்கு மற்றும் ஆரத்தியுடன் அன்றைய நிகழ்வுகள் நிறைவடைந்தன.

டிசம்பர் 19ஆம் தேதி வெள்ளிக் கிழமை அன்று காலை குருவை சந்தித்து ஆசி பெறுவதற்காக சிலர் வந்திருந்தனர். மதியம்



சுமார் 2 மணியளவில் நாங்கள் ஸ்ரீ லக்ஷ்மி மனித புனர்வாழ்வு சங்கம் என்னும் இடத்திற்கு திரு.ரவி அவர்களின் ஏறபாட்டில் சென்றோம். அந்த இடத்தில் முதியோர்கள் மற்றும் பக்கவாதம் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் தங்கவைக்கப்பட்டு வைத்தியம் செய்கிறார்கள்.

திரு. Dr. சிவா அவர்கள் இந்த சேவை மையத்தை இயலாதவர்கள் பயன்பெறும் வகையில் அமைத்து நிர்வகித்து வருகிறார். அந்த இடத்தில் நாங்கள் அனைவருக்கும் மதிய உணவு வழங்கினோம். குரு அவர்கள் சாயிபாபாவின் சீடர் என்பதை அறிந்து சிவா அவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

தானும் பாபாவின் பக்தர் என்று கூறி குரு அவர்கள் ஞாயிற்றுக் கிழமை, அதாவது டிசம்பர் 22ஆம் தேதி மாலை 7 மணிக்கு அங்கு வந்து சத்சங்கம் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். குரு அவர்களும் மகிழ்வோடு சம்மதித்தார். அன்று இரவு சாயி பக்தர் ஒருவரின் வீட்டில் உணவு ஏற்பாடு செய்திருந்தார்கள். சத்சங்கம் மற்றும் போதனை களுடன் அன்றைய நாள் இனிதே நிறைவடைந்தது.

டிசம்பர் 20 ஆம் தேதி சனிக் கிழமை காலை சரியாக 9 மணிக்கு 'மௌனம்' நிகழ்ச்சி தொடங்கியது. நான்கு தியானங்கள் மற்றும் ஆத்மஞான போதனைகளுடன் மாலை 5 மணிக்கு நிகழ்ச்சி இனிதே நிறைவடைந்தது. மாலை 5 முதல் 6 மணி வரை நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரும் தங்கள் மௌன அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.

இதை 'Youtube live' மூலம் அனைவரும் கண்டுகளித்தனர். மீண்டும் மீண்டும் மௌனம் நிகழ்ச்சியில் கலந்துகொள்வது மூலம் தங்களுக்குள் ஏற்படும் மாற் றங்களை அனைவரும் பகிர்ந்து கொண்டுதோடு மட்டுமல்லாமல் தொடர்ந்து இலங்கையில் இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்ய வேண் டும் என்று திரு.ரவி அவர்களுக்கு கோரிக்கை விடுத்தனர். இது அனை வருக்கும் தற்காலத்தில் தேவையான பயிற்சி என்று கூறினர்.

டிசம்பர் 21 ஆம் தேதி ஞாயிறு அன்று காலை 10.30 மணிக்கு அவிசாவளை எனும் இடத்தில்

அமைந்துள்ள ஸ்ரீ சீரடி சாயி ஆசிரமத்தில் 'சாயி உடன் ஞான மார்க்கம்' எனும் தலைப்பில் குரு அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். நிர்வாகிகள் பூர்ண கும்பத்துடன் குரு அவர்களை வரவேற்று அங்கிருந்த அனைவருக்கும் அறிமுகம் செய்தனர்.

அன்று உலக தியான தினம் என்பதை கூறி குரு அவர்கள் பேசத் தொடங்கி, தன் ஞானமார்க்க பேசினால் அனைவரின் கவனத்தை ஈர்த்ததோடு மட்டுமல்லாமல் அவர்களின் தனிப்பட்ட கேள்விகளுக்கும் பதிலளித்தார்.தியானம் மற்றும் பாபாவின் ஆர்த்தியோடு நிகழ்ச்சி நிறைவடைந்தது. இந்த நிகழ்வையும் 'Youtube live' மூலம் அனைவரும் கண்டுகளித்ததோடு மட்டுமல்லா மலாமல், தியான தினத்தினத்தில் குருவுடன் இணைந்து தியானம் செய்தனர்.

அன்று மாலை 7 மணிக்கு ஸ்ரீ லக்ஷ்மி மனித புனர்வாழ்வு சங்கத்தில் குரு அவர்களின் சத்சங்கம் கேள்வி பதிலாக தொடங்கியது. குரு அவர்கள் அனைவரின் கேள்விகளுக்கும் நெத்தியடியான பதில்களை அளித்தார். காரசாரமாக சென்ற உரையாடல் இனிமையான ஞான தீர்வு மற்றும் தியானத்துடன் நிறைவடைந்தது.




இதுவும் 'Youtube live' மூலம் ஒளிபரப்பப்பட்டது.

நாங்கள் கிளம்ப ஆயத்தமான போது Dr.சிவா அவர்கள் குருவுக்கும் சாயிபாபாவுக்குமான தொடர்பை பற்றி விவரிக்குமாறு கேட்டு அறிந்து கொண்டதோடு மட்டுமல்லாமல் ஜனவரி மாத சீரடி பயணத்தில் கலந்து கொள்வதாக ஆர்வத்துடன் கூறினார்.

டிசம்பர் 22 ஆம் தேதி திங்கள் காலை குரு அவர்கள் சில அன்பர்களை சந்தித்தார். ஒரு சாயி பக்தரின் அழைப்பை ஏற்று அவர்கள் வீட்டிற்கு சென்று அவர்களுக்கு ஞான போதனை மற்றும் தியானம் செய்தார். அவர்களின் பிரார்த்தனைகள் அனைத்தும் விரைவில் நிறைவேறும் என்று ஆசி கூறி விடைபெற்றோம்.

மதியம் சென்னைக்கு புறப்படுவதற்கான ஏற்பாடுகளை நாங்கள் செய்து கொண்டிருந்தபோது, திரு.ரவி அவர்கள் மகிழ்வுடன் எங்களிடம் வந்து திரு.உலகநாயகம் ஐயா அவர்கள் வியாழன் அன்று நிகழ்த்திய சத்சங்கத்தை பற்றி இலங்கையில் வெளியாகும் அனைத்து நாளிதழ்களிலும் கட்டுரையாக வெளியிட்டிருந்தார்கள். அதை படித்த மற்ற சாயி கோவில் நிர்வாகிகள் தங்கள் கோவிலுக்கும் குரு அவர்கள் வந்து சத்சங்கம் நிகழ்த்த ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டதாக தெரிவித்தார். கண்டிப்பாக விரைவில் மீண்டும் இலங்கை வருவதாக உறுதி கூறி, அனைவரிடமும் பிரியாவிடை பெற்றுக்கொண்டு சென்னை வந்தடைந்தோம். ●



அனைவருக்கும்
இனிய ஆங்கில
புத்தாண்டு,
மற்றும்
பொங்கல்
வாழ்த்துக்கள்
சாய் தியானாலயா
ஆத்மஞான பீடம்
அயனாவரம்-23
9941816692

சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடம் வழங்கும்

"சாய் சங்கமம்"

15.2.2026 ஞாயிற்றுக்கிழமை
காலை 8 மணியில் இருந்து மதியம் 2 மணிவரை

சாயி பஜன், குத்துவிளக்கு பூஜை, ஜோதி தியானம், பிரார்த்தனை, ஹோமம், அன்னதானம், சத்சங்கம்



இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை.
இம்மாத மாபெரும் ஹோமம்

ஸ்ரீ மகாலட்சுமி ஹயக்கிரீவர் ஹோமம்

(கல்வி, நினைவாற்றல், ஞானம் மற்றும் கற்றல் திறன், செல்வம், அதிர்ஷ்டம், நிலையான பொருளாதார வளர்ச்சி மற்றும் வளமான வாழ்க்கைக்கு வழிவகுக்கும்.)

ஹோம காணிக்கை: ரூ.500/-

குறிப்பு: ஹோமத்தில் கலந்து கொள்ள முடியாதவர்களுக்கு பிரசாதம் தபாலில் அனுப்பி வைக்கப்படும். ஹோமப் பொருட்கள் அன்னதானத்திற்கு காணிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலும் விபரங்களுக்கு :

திருமதி. ஜெயந்தி ஸ்ரீராம்
போன்: 63851 29372

சீரடி சாயிநாதரின் புகழ் பரப்பும் மாத இதழில் விளம்பரம் செய்து சாயிநாதரின் ஆசியைப் பெற்று உங்களது வியாபாரத்தில் மேன்மேலும் வளர்ச்சியடையுங்கள்.

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே!

உங்களது நிறுவனங்கள், தயாரிப்புகள், மற்றும் உங்கள் வீட்டு பிறந்தநாள், திருமணநாள், விஷேசங்கள், தொடர்பான விளம்பரங்களை குறைந்த செலவில் வண்ணத்தில் பிரசுரித்து பயனடையுங்கள்.



குறைக்கப்பட்ட கட்டணங்கள்

பின் அட்டை கலர் முழுபக்கம்	ரூ.3000
நடுப்பக்கம் கலர் முழுபக்கம்	ரூ.2000
நடுப்பக்கம் கலர் அரைபக்கம்	ரூ.1000
கறுப்பு/ வெள்ளை முழு பக்கம்	ரூ.1500
கறுப்பு/வெள்ளை அரைபக்கம்	ரூ.750

குறிப்பு: சாயி சொந்தங்களுக்குள் திருமண பந்தத்தில் இணைய விரும்பும் மணமக்களுக்காக "வரன் தேவை" அரை பக்க வண்ண விளம்பரம் ரூ.500 மட்டுமே!

யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் எழுதிய

"மௌனத்தின் மூலம் தவம்"



பிறந்தநாள், திருமணப்பரிசாக
அளிக்கக்கூடிய சிறந்த நூல்


புத்தகம் தேவைப்படுவோர்
தொடர்பு கொள்ளவும்

விலை: ரூ.100/-
(தபால் செலவு உட்பட)

SAI DHYANALAYA

Scan to pay with any UPI app


தொடர்புக்கு: 9941816692.



தமிழ் புத்தகம்
விலை 400/-
(தபால் செலவு உட்பட)

யோகி ஸ்ரீராம் பாபா
அவர்கள் எழுதிய அற்புதமான
ஆன்மீக அனுபவத் தேடல்கள் நிறைந்த
"குருவைத்தேடி"
நூல் தமிழிலும், ஆங்கிலத்திலும்
விற்பனையில் உள்ளது.

"குருவைத்தேடி" புத்தகம்
வாங்குவோறுக்குசகல
தோஷங்களையும் போக்கும்
ரூ.1000 மதிப்புள்ள
"சாயி தாயத்து"
இலவசமாக
அனுப்பிவைக்கப்படும்.



ஆங்கில புத்தகம்
விலை 250/-
(தபால் செலவு உட்பட)

SAI DHYANALAYA

G- PAY NO: 9941816692

குரு கண்ணையா சுவாமிகளும் சீடர் முருகேசு சுவாமிகளும்



ஸ்ரீ கண்ணையா யோகி.
அம்பத்தூர்.



ஸ்ரீ முருகேசு சுவாமிகள் சமாதி பீடம்,
நுவரெலியா. இலங்கை.

யோகி ஸ்ரீ கண்ணையா அவர்கள் குருசுவாமி தம்பதியினருக்கு மே 05, 1882 அன்று கோயம்பத்தூரில் பிறந்தார். இவரது தந்தை குருசுவாமி அவர்கள் அப்பிரதேசத்தின் பிரபலமான நாடி ஜோதிடர் ஆவார். சிறு வயதிலேயே கடவுளை காண வேண்டும் என ஏக்கம் கொண்டிருந்தார் கண்ணையன் அவர்கள்.

கண்ணையா யோகி அவர்கள் தனது ஆறாவது வயதிலேயே ஆன்மீகப் பற்றுடன் வளர்ந்தார். ஸ்ரீ அகத்திய முனிவரை தனது ஆசானாகக் கொண்டு, நான்கு வேதங்கள், 96 தத்துவங்கள், எல்லா மொழிகளின் வடிவ, ஒலி ரகசியங்கள், யந்திர, தந்திர, மந்திரங்கள், ஆய கலைகள் 64, அஷ்டமா சித்திகளின் பெருக்கமான 512 சித்திகள் உட்பட அனைத்துவிதமான ஆன்மீகக் கலைகளையும் 18 ஆண்டுகாலம் கற்றுக்கொண்டார்.


18 ஆண்டுகால ஆன்மீகக் கல்வியின் பின்னர், தமது குருவின் உத்தரவின் பேரில் மீண்டும் கோயம்புத்தூர் திரும்பினார். அங்கு தமது பெற்றோரின்

யோகி ஸ்ரீராம் பாபா

சம்மதத்துடன் திருமணமும் முடித்தார். அதன் வாயிலாக இரு குழந்தைகளுக்கு தந்தையுமானார். இவ்வாறான காலகட்டத்தில் தனது தந்தையார் மரணமடைய, அவரது நாடி ஜோதிடப் பணியினைத் தொடர்ந்தார் கண்ணையா. சில காலத்தில தமது துணைவியாரும் இறந்துவிட, தமது குழந்தைகளை பராமரிப்பதற்காக தம் குருவின் உத்தரவின் பேரில் மறுமணமும் புரிந்துகொண்டார்.

கண்ணையா யோகி அவர்கள் சென்னை அம்பத்தூரில் ஆத்ம ஞான யோக சபையினை நிறுவினார். இதன்மூலம் அங்கு வரும் பக்தர்களுக்கும் அடியவர்களுக்கும் தமது குருவிடமிருந்து கற்ற ஆன்மீக வித்தைகளை கற்பித்து வரலானார். கண்ணையா யோகி அவர்களது பக்தர்கள் உலக நாடுகள் பலவற்றில் உள்ளார்கள். இவருக்கு சீடர்கள் பலர் இருந்தாலும், இலங்கை முருகேசு சுவாமிகள், யோகி ஜனார்த்தனா போன்றவர்கள் மிகப் பிரபலமானவர்கள்.

கண்ணையா யோகி அவர்கள் பல நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் பல கையெழுத்துப் பிரதிகளாகும். பிற்காலத்தில் அவற்றுள் மானச யோகம் ஸ்ரீ காயத்திரி உபாசனா என்ற நூல்கள் அவரது சீடர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டன. சுவாமி கண்ணையா யோகி அவர்கள் 2.12.1990 அன்று சமாதி அடைந்தார். அவரின் சமாதிஸ்தலம் சென்னை அம்பத்தூரில் அமைந்துள்ளது.



ஸ்ரீ. முருகேசு சுவாமிகள், நுவரெலியா, இலங்கை.

கண்ணையா சுவாமிகளின் சீடரான முருகேசு சுவாமிகள் 1933ம் ஆண்டு அக்டோபர் மாதம் 26ம் நாள் இலங்கையின் மத்திய மாகாணத்தின், கண்டி மாநகரில் இராமன் காளிமுத்து சந்தனம்மா தம்பதிகளுக்கு மூத்த புதல்வனாகப் பிறந்தார். அவர் மிகவும் வறுமையான குடும்பத்தில் பிறந்ததனால், தமது இளம் பிராயத்திலேயே பல்வேறு கூலி வேலைகளுக்கும் செல்ல நேர்ந்தது. அவ்வாறான ஓர் சந்தர்ப்பத்திலேயே சுவாமிகளுக்கு ஓர் மகாத்மா காட்சியளித்து, கணபதி மந்திரங்கள் அடங்கிய நூல் ஒன்றினையும் வழங்கினார். அன்றுமுதல் சுவாமிகள்



தினமும் அந்த மந்திரங்களை செபிக்க ஆரம்பித்தார்.

சுவாமிகள் பின்னாளில் இந்தியாவிற்கு சென்று சென்னை அம்பத்தூரில் வாழ்ந்த பண்டிதர் கண்ணையா யோகி மகரிஷிகளை தமது சற்குருவாக ஏற்று ஆத்மஞானத்தினை பயின்றார். சுவாமிகள் தமது குருவின் கட்டளைப்படி காயத்திரி மந்திரத்தினை கற்று, ஆராய்ந்து, அறிந்து பாண்டித்தியம் பெற்ற தனால், காயத்திரி சித்தர் என அழைக்கப்படலானார். அத்துடன் தமது ஆராய்ச்சியின் முடிவுகளை பல நூல்களில் எழுதினார்.

சுவாமிகள் இந்திய நாட்டில் பல்வேறு பகுதிகளுக்கு சென்று, காடுகள், மலைகள், குகைகளில் பல சித்தர்கள், முனிவர்கள், மஹரிஷிகளை கண்டு வணங்கி அவர்களிடமிருந்து பல்வேறு சித்திகளையும் கைவரப் பெற்றார். பின் தன் தாயகமான இலங்கைக்குத் திரும்பி, ஆன்மீகப் பணிகளை தொடர்ந்தார். அவற்றுள் சுவாமிகளால் நிறுவப்பட்ட நுவரெலியா நகரில் அமைந்துள்ள ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயம் மற்றும் ஸ்ரீ காயத்திரி பீடம் என்பன முக்கியமானவை. அது மட்டுமல்லாது நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கோயில்கள், ஆச்சிரமங்கள், காயத்திரி பீடங்கள் என பலவற்றையும் நிறுவியுள்ளார். இவற்றுள் மட்டக்களப்பு நாவலடியில் உள்ள சப்தரிஷி மண்டபம் பிரசித்தமானது.

முருகேசு சுவாமிகள் உலகின் பல நாடுகளுக்கு சென்று மக்களுக்கு ஆன்மீக விழிப்புணர்வினை ஏற்படுத்தினார். சுவாமிகள் விட்டுச் சென்ற சேவைகளை அவரது சீடரான மட்டக்களப்பு

மகா யோகி ஆன்மீகக்குரு எஸ். புண்ணியரெத்தினம் சுவாமிகள் தற்போது தொடர்ந்து செய்து வருகின்றார்கள்.

கண்ணையா யோகி அவர்களது பக்தர்கள் உலக நாடுகள் பலவற்றில் உள்ளார்கள். இவரது முதன்மைச் சீடர் காயத்திரி சித்தர் முருகேசு சுவாமிகள் ஆவார். ஒருமுறை முருகேசு சுவாமிகள் நள்ளிரவு தூக்கத்திலிருந்து விழித்தபோது, சப்தரிஷிகள் ஆகாயத்தில் இருந்து இறங்கி கண்ணையா யோகி மகரிஷிகளிடம் சிரம் தாழ்த்தி வணங்கி உபதேசம் கேட்டு சென்றதை தாம் நேரில் கண்டதாக குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து சித்திகளையும் கைவரப்பெற்று சித்தியடைந்த துடன் நினைத்ததை நினைத்த மாத்திரத்தில் படைக்கும் வல்லமை படைத்த கண்ணையா யோகி அவர்கள் இறுதிவரை மிகவும் எளிமையாகவும், பற்றின்றியும் வாழ்ந்ததாகவும் முருகேசு சுவாமிகள் கூறுவார். முருகேசு சுவாமிகளினால் தமது குருநாதருக்காகப் பாடப்பட்ட ஸ்ரீ கண்ணைய யோகீஸ்வரர் துதி,

காவி உடுத்திடாமல் கமண்டலம் எடுத்திடாமல், காட்டிடை அலைந்திடாமல் காணலிடை நலிந்திடாமல், பூவுலகம் தன்னை சுத்த பொய் என்றும் புகன்றிடாமல், புறத்தொரு மதத்தினோரைப் புண்பட பேசிடாமல் சேவைகள் செய்தற்போதும் தெய்வத்தை தெரிவோம் என்று, தெளிவுற காட்டினாய் உன் தினசரி வாழ்கைதன்னால் தீவினை இருட்டை போக்கி ஜகமெல்லாம் விளங்கும் ஆன்மிக யோக ஞான தீபமே! ஸ்ரீ கண்ணைய தேவனே போற்றி! போற்றி! போற்றி!

முருகேசு சுவாமிகள் கடந்த 2007ம் ஆண்டு உடல்நலம் பாதிக்கப்பட்ட நிலையில், மருத்துவ சிகிச்சைக்காக இந்தியா சென்றார். அங்கு மருத்துவமனை ஒன்றில், செப்டம்பர் 24, 2007 அன்று சமாதியடைந்தார். இலங்கை நுவரெலியா ஸ்ரீ காயத்திரி பீட வளாகத்திலுள்ள தியான மண்டபத்தில் சுவாமிகளின் ஜீவசமாதி அமைய பெற்றுள்ளது. அங்கு சுவாமிகளின் பக்தர்களால் தினந்தோறும் அனைத்துவிதமான வழிபாடுகளும் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

சுவாமிகள் எழுதிய புத்தகங்கள்:

1. ஸ்ரீ காயத்ரி மந்திர மகிமை, 2. ஞான குரு, 3. மனித காந்தம் 4. எளிய முறை யோகப் பயிற்சி 5. சகல தெய்வ உபாசனா சித்தி, 6. காயத்ரி உபாசனா பத்ததி 7. காயத்ரி 8. ராமாயணம் 9. காயத்ரி கீதை, 10. காயத்ரி மூலம் குண்டலினி விழிப்பு, 11. பிரபஞ்சம் இன்பமயம் 12. மனித உடலில் தெய்வ ஞானம் போன்றவை.

இலங்கை சுற்றுலா செல்லும் அன்பர்கள் சீதா கோவில் செல்வதற்கு நுவரெலியா செல்வார்கள். அங்கு கண்டிப்பாக முருகேசு சுவாமிகளின் ஆஸ்ரமம் சென்று சுவாமிகளின் ஆசி பெற்று வாழ்வில் பல சிறப்புகளை அடைய வேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.

●

உடலே ஆலயம்



உடம்பில் ஏழு சக்கரங்கள் சுழல்கின்றன! நம் உடம்பை பஞ்சகோஷம் என்பர்! ஐந்து வகையான பரிமாணங்கள் கொண்டது இந்த உடல்! இரண்டாவது பரிமாணமத்திற்கு சூட்சும சரீரம் என்று பெயர்! அதை அருவ சரீரத்தால் உணர முடிகிறது! கனவில் நாம் அந்த மனோ சரீரத்தினால் தான் கனவில் வரும் காட்சிகளை அனுபவிக்கிறோம்!* புறக் கண்ணால் காண முடியாத அது பொய் புறக் கண்ணால் காண முடிந்த உடல் மெய்

ஆனால் இரண்டுமே பொய் எனும் நிலையை நோக்கி நகர்வதே ஆன்ம ஞானம்! அதாவது இரண்டுமே கனவு என்று உணர்த்துவதே யோகத்தின் தன்மை! ஆக இந்த மனோ சரீரத்தில் தான் ஏழு சக்கரம் இயங்குகிறது! தொடர்ந்து பயிற்சி செய்து பழக்கத்தில் யோகத்தை கொண்டுவர வேண்டும். வெறும் பேசுவதில் மட்டுமல்ல! வெறும் பக்தனாக இருந்து தினசரி யோகம் பழகினாலும் பலன் இருக்கிறது. யோகத்தின் மேல் பக்தி வைத்து பழகினாலும் பலன் இருக்கிறது!

நமக்கு யோகம் பழக நேரமும் இருக்கவே செய்கிறது. ஒரே கேள்வி ஈடுபாடு இருக்கிறதா? என்றால் இல்லை எல்லாம் சுவாமி சங்கல்பம் என்று நம்மை நாமே ஏமாற்றி எதுவும் செய்யாமல் சோம்பேறியாக அல்லவா இருக்கின்றோம். பாபா பாதையைத் தான் காட்டுவார்! அதில் நடப்பவர்களுக்கே சிறகு முளைக்கிறது. நடக்காமல் நிற்பவர்களுக்கு கால்களில் கர்ம வேர்கள் முளைத்து மேற்கொண்டு அசைய விடாமல் உங்களை தடுத்து விடும்.

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் தனது வாட்அப் தளத்தில் தினந்தோறும் ஒரு பொன்மொழியை பதிவிடுவதை வழக்கமாக வைத்திருக்கின்றார். அதை வலைத்தளவாசிகள் தினந்தோறும் வாசித்து மகிழ்கின்றனர். அந்த பொன் மொழிகளை வாசகர்கள் அனைவரும் படித்து மகிழவேண்டும் என்று தேதி வாரியாக தொகுத்து வழங்குகிறேன். வாசகர்கள் படித்து பயன்பெற வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.



யோகி ஸ்ரீராம் பாபாவின்

இனிய மொழிகள்

01.11.25

சந்தேகம் மற்றும் அச்சம் கொண்டவர்கள் எதையும் சாதித்ததாக சரித்திரம் இல்லை.

02.11.25

விளக்கின் புகை கண்ணாடியில் படிந்து வெளிச்சத்தை மங்கலாக்கும். அதைப் போலவே புலனின்பம் தரும் இன்பங்கள் மீது நாம் வைக்கும் பற்று ஞானம் என்னும் ஒளியை மங்கச் செய்து விடும்.

03.11.25

நான் அறிவாளி என்றறிய எந்த அறிவு தேவைப்பட்டதோ அதே அறிவுதான் நான் முட்டாள் என்றறியவும் தேவைப்படும். அறிவே தெய்வம்.

04.11.25

புகழ்ந்துரைக்க காரணங்கள் தேவையில்லை. குற்றம் சொல்ல காரணங்கள் கட்டாயம் தேவை. எதுவரினும் குற்றம் கடிவோம். நல்லன நாடிச்செய்வோம்.

05.11.25

உன்னுடைய "சத்குரு"வை சந்திக்க வேண்டுமானால் உனது தீர்மானங்கள், கொள்கைகள்,பழைய அபிப்பிராயங்கள், எண்ணங்கள், தத்துவங்களை கைவிட்டே ஆக வேண்டும். இவற்றை பிடித்து தொங்கி கொண்டிருக்கும் வரை உன் "சத்குரு"வை உன்னால் சந்திக்கவே முடியாது.

06.11.25

குரு உனக்கு நம்பிக்கையை தவிர வேறு எதையும் தருவதில்லை. ஆனால் நீயோ உன் அகங்காரத்தை முழுமையாக தரவேண்டி இருக்கும்.

07.11.25

வாழ்க்கையில் நாம் அடைய வேண்டிய லட்சியத்தையும்,

தொகுப்பு: ஜெயந்தி ஸ்ரீராம்

இப்போது நாம் சென்று கொண்டி ருக்கும் போக்கையும் தினந்தோறும் சிந்தித்துப் பாருங்கள்.

08.11.25

பல பிறவிகளில் தூண்டப்படும் கர்ம வினையான எண்ணங்களால் சேகரிக்கப்பட்ட வெற்று அறிவை, முற்றாக அழிப்பதே தியானமாகும்

09.11.25

நீ விரும்பியதைக் கேட்டு இறைவனிடம் பிரார்த்தனை செய்யாதே! இறைவன் என்ன தருகின்றாரோ அதை ஏற்றுக் கொள்ளும் மனம் வேண்டும் என்று பிரார்த்தனை செய்!அப்போதே உன் வாழ்க்கை வசந்தமாக மாறுவதை உணர்வாய்!

10.11.25

அன்றாட செயல்கள் அனைத்தையும் விழிப்புணர்வோடு செய்தீர்கள் என்றால் நீங்கள் சொர்க்கத்தில் இருக்கின்றீர்கள் என்று அர்த்தம். விழிப்புணர்வோடு இல்லை என்றால் நரகத்தில் இருக்கின்றீர்கள் என்று அர்த்தம்.

11.11.25

உங்கள் மனதினில் யாரை யாவது, எதையாவது தூக்கி சுமக் காதீர்கள். அதுவும் கர்மாதான். பாவங்களை தூக்கி சுமப்பதும் கர்மாதான், புண்ணியங்களை தூக்கி சுமப்பதும் கர்மாதான்.

12.11.25

இயல்பாக இரு! எளிமையாக இரு! அலட்டாதே, ஆர்ப்பரிக்காதே! அகிலத்தில் அடுத்தவர் போல் வாழு, பெருமையை வெளிப்படுத்த விளம்பரம் தேவையில்லை. அணுகுபவர்கள் அவர்களாகவே புரிந்து கொள்வார்கள்.

13.11.25

"சகிப்புத்தன்மை" எல்லா வற்றையும் விட அதிக ஆற்றல் மிக்கது. பக்தன் வளர்த்துக்கொள்ள வேண்டிய உன்னதமான இயல்புகளில் இதுவும் ஒன்று. பொறுமையும் சகிப்புத்தன்மையும் ஆன்மீக சாதனையின் இதயமாகும்.

14.11.25

உணர்ச்சிவசப்பட்ட நிலையில் பிறரை தூற்றுவதும், அவர்களுக்கு தீமை நினைப்பதும், அது பிறருக்கு தீமை அளிக்குமோ இல்லையோ, அது உங்களுக்குள்ளேயே வளர்ந்து, இறுகி சொல்லொன்னா துன்பத்தை ஈட்டித்தரும். எனவே பிறரைப் பற்றி கவலை கொள்ளாதீர்!

15.11.25

குருவின் பார்வையில் வேண்டியவர், வேண்டாதவர் என்பது கிடையாது. எப்போது சீடன் குருவிடம் முழுச்சரணாகதி அடைகின்றானோ, அப்போது அவன் பல சோதனைகளை அனுபவித்தாலும் குருவின் அன்பு மழை அவன் மீது பொழியத் துவங்கும். சீடனிடம் நான் எனும் அகங்காரம் இல்லாமல் போனால் குருவின் அன்போடு கருணையையும் பெறலாம்.

16.11.25

தண்ணீரில் கல்லைப்போட்டால் அலைகள் தோன்றி கரை வரையிலும்

பரவும். அதுபோலவே நம் மனதில் எழும் எண்ணங்களும், நல்லதோ, கெட்டதோ, அது உடல் முழுவதும் பரவி நல்ல எண்ணங்களுக்கேற்ப, நல்ல செயல்களையோ, தீய செயல்களையோ செய்கின்றோம்.

17.11.25

இந்த உடலை ஆதாரமாக கருதாதீர். அது மாயத்தோற்றம் என்பதை உணருங்கள். உங்கள் ஞானப்பார்வையை வளர்த்துக் கொள்ளுங்கள். இறைப்பார்வையை பெறுங்கள். உங்கள் பார்வையில் இறைமை நிறையும் போது தான் படைப்பு முழுவதும் இறையாகத் தோன்றும்.

18.11.25

மற்றவர்கள் உங்களுக்கு எதை செய்யக்கூடாது என எண்ணுகின்றீர்களோ, அதை நீங்கள் மற்றவர்களுக்கு செய்யாதீர்! மற்றவர்கள் உங்களுக்கு எதை செய்யவேண்டும் என்று நினைக்கின்றீர்களோ, அதை நீங்கள் அவர்களுக்கு செய்யுங்கள் .இதுவே தர்மத்தின் அடிப்படைக் கோட்பாடு.

19.11.25

வாழ்க்கையில் பிரச்சனைகளால் அல்லல்படும் போது, குருவின் கருணையான உருவத்தையும், அவரின் உபதேசங்கள், அருளுரைகளையும் நினைக்கப் பழகுங்கள். பிறகு உங்கள் சங்கடங்கள் காற்றினால் கலைக்கப்பட்ட மேகங்களைப்போல் காணாமல் போகும்.

20.11.25

கணவன், மனைவியிடம் நிரந்தர அமைதி வர வேண்டும் என்றால் தன்னை அறிவதன் மூலம் ஒழுக்கத்தை மேம்படுத்திக் கொள்வதினால் மட்டுமே முடியும். அதுவே பயன் அளிக்கும். அமைதியையும் ஆனந்தத்தையும் அளிக்கும்.

21.11.25

உங்கள் வாழ்க்கையில் சந்தேகங்களுக்கு இடமளிக்காதீர்கள். சந்தேகங்கள் உங்களை அழித்துவிடும். சந்தேகத்தை விட்டு விட்டு அன்பை வளர்த்துக் கொள்ளுங்கள். அதுவே உண்மையான ஆன்மீகம்.

22.11.25

நீங்கள் வெளியே காணும் தவறுகள் அனைத்தும் உங்களிடமே உள்ளன. உங்களை மாற்றிக்கொண்டால் உலகம் மாறிவிடும். எது உங்களை தாழ்த்துகிறது, எது உங்களை உயர்த்துகின்றது என்பதை பிரித்து அறிவதே ஆன்மீக அறிவு ஆகும்.

23.11.25

அடுத்தவர்களை புரிந்து கொண்டு, அவர்களிடம் பரிவோடும், உதவியாகவும் இருங்கள். மற்றவர்களின் இழிச்சொல்லையும், விமர்சனங்களையும், உங்களுக்கு அளிக்கப்பட்ட விருதுகளாக ஏற்கப் பழகுங்கள். ஒவ்வொருவருடனும் அவரது இயல்பும், நடத்தையும் எவ்வாறாக இருந்தாலும், நட்பாக இருக்க முயற்சி செய்யுங்கள்.

24.11.25

எனது மனம், உணர்வுகள், கற்பனைகள், அனைத்தையும்

இறைவனுக்கு சமர்பணம் என்கிறீர்கள். ஆனால் சிறிது நேரத்திலேயே உங்களது பிடியில் இருந்து உங்கள் மனம் தப்பி விடுகின்றது. பிறகு அதை எவ்வாறு இறைவனிடம் ஒப்படைக்க இயலும். எதற்கு நீங்கள் எஜமானன் இல்லையோ அதை எப்படி இறைவனுக்கு தரமுடியும்.

25.11.25

நிரந்தர சத்தியமான, தெய்வீக அனுபவத்தை பெறுவதும், இறைக்காட்சியை காண்பதும், இறையோடு உரையாடுவதுமே "மதம்" எனப்படும்.இதை அறியாது, வெவ்வேறு வழிபாடுகளையும், பிரார்த்தனைகளையும் "மதம்" என்று கருதி உங்கள் வாழ்வை வீண் செய்வது அறியாமையாகும்.

26.11.25

சுய லாபத்திற்காக இறைவனை நோக்கி பிரார்த்தனை செய்தல் கூடாது. ஏனெனில் நாம் கேட்கும் வரை இறைவன் காத்திருக்கின்றான் என்று பொருள் படுகின்றது. உங்களுக்கு எது நன்மையோ, அதன்படி அவர் உங்களுக்கு அருள் புரிகின்றார். எனவே இறைவன் தருவதை அப்படியே ஏற்கும் மனம் வேண்டும் என்று பிரார்த்தியுங்கள்.

27.11.25

கற்றதை கடைபிடிப்பவனே உண்மையான பக்தன். மற்றவர்களின் பாராட்டை எதிர் பார்த்து எதையும் செய்யக்கூடாது. சிரத்தையோடு செயல்பட்டால் மதிப்பு தானே வரும். சொல்வதை செய்யாமல் உபதேசத்தோடு நின்றுவிட்டால் உலகம் அவனை ஒதுக்கிவிடும்.

28.11.25

மெஞ்ஞானம் அடைவதற்கு வாழ்க்கையில் ஏற்படும் ஒவ்வொரு அனுபவத்தையும் அனுபவிக்க வேண்டும் என்ற அவசியமில்லை. மற்றவர்களின் வாழ்க்கையில் ஏற்படும் அனுபவங்களை விழிப்புணர்வோடு கவனித்தலே போதுமானது

29.11.25

தனக்கு கீழாக இருப்பவனை வளர்த்து விடுவதும், அவனது வளர்ச்சியைக் கண்டு ஆனந்தப் படுவதுமே மேலானவன் சிந்தனையாக இருக்க வேண்டும். அதைக் கண்டு பொருமுவதோ, பொறாமைப்படுவதோ கூடாது.

30.11.25

ஒவ்வொருவர் உள்ளும் உறைவது தெய்வகத்தின் ஒளியே! உங்களைச்சுற்றி இருப்போரை குறை கூறுவது அந்த தெய்வீகத்தையே குறை கூறுவதற்கு ஒப்பாகும்.

31.11.25

பிறர் நலனுக்காக வேண்டுவதே முழுமையான பிராத்தனை ஆகும். உங்களால் நேரடியாகப் பிறருக்கு உதவ முடியவில்லையே என ஏங்க வேண்டியதில்லை. ஏனெனில், எப்போது பிறருக்கு உதவ வேண்டும் என்ற நல்லெண்ணம் உங்கள் மனதில் தோன்றுகின்றதோ அக்கணமே இறைவன் நீங்கள் வேண்டினவருக்கான தேவையை பூர்த்தி செய்கின்றான்.



ஸ்டார் புரூட்ஸ் என்று அழைக்கப்படும் நட்சத்திரப் பழம், ஒரு வெப்பமண்டல பழமாகும். அது தனித்துவமான நட்சத்திர வடிவத்துடன் காணப்படும். இந்த பழம் புளிப்பு மற்றும் இனிப்பு சுவையுள்ள பழமாகும். இது பார்ப்பதற்கும் அழகாக இருக்கும். மற்றும் நிறைவான ஊட்டச்சத்துக்கள் நிறைந்தது.

இந்தப்பழம் வாதம், பித்தம், கபம் என்ற மூன்று தோஷங்களையும் சமநிலைப்படுத்தக்கூடியது. இதன் புளிப்பு இனிப்புச் சுவை உடலை குளிர்விக்க உதவுகிறது, இது தீவிரமான பித்தத்தை தனித்து நன்மை பயக்கும். அதே நேரத்தில், அதன் துவர்ப்புச் சுவைகள் செரிமான சக்தியை மேம்படுத்துகின்றன, மேலும் இது கபத்தை சமநிலைப்படுத்தவும் வாதத்தை அமைதிப்படுத்தவும் உதவுகிறது.

நட்சத்திர பழத்தில் நார்ச்சத்து அதிகமாக நிறைந்துள்ளது, இது செரிமானத்தை ஊக்குவிக்கிறது. இது அக்னியை தூண்டுகிறது, மலச்சிக்கலை எளிதாக்கவும் குடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் உதவுகிறது. அதே நேரத்தில் மிகச்சிறந்த மலமிளக்கியாகவும் செயல்படுத்துகின்றது. அதன் புளிப்பு சுவை பசியை அதிகரித்து செரிமான சக்தியை மேம்படுத்துகின்றது.

வைட்டமின் சி மற்றும் ஆக்ஸிஜனேற்றிகளால் நிரம்பிய நட்சத்திர பழம் நோயெதிர்ப்பு மண்டலத்தை பலப்படுத்துகிறது. நச்சுகளை எதிர்த்துப் போராடவும், தொற்று நோய்களிலில் இருந்து பாதுகாக்கின்றது. இந்தப் பழத்தின் குளிர்ச்சி மற்றும் வெப்பமான காலநிலையில் வெப்பம் தொடர்பான நோய்களுக்கு ஆளாகும் மக்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தியைப் பராமரிக்க ஏற்றதாக அமைகிறது.

நட்சத்திரப் பழம் அதன் நச்சு நீக்கும் பண்புகளுக்கு பெயர் பெற்றது, இது இரத்தத்தை சுத்தப்படுத்தவும், பளபளப்பான சருமத்தை ஊக்குவிக்கவும் உதவுகிறது. ஃபிளாவனாய்டுகள் மற்றும் வைட்டமின் ஏ நிறைந்த இது, முகப்பரு, தழும்புகள் மற்றும் முன்கூட்டிய வயதானது போன்ற தோல் பிரச்சினைகளை எதிர்த்துப் போராடுகிறது., மேலும் நட்சத்திரப் பழம், தடிப்புகள் மற்றும் வீக்கம்



போன்ற தோல் குறைக்க பயன் படுகின்றது.

ஆயுர்வேதத்தில், நட்சத்திரப் பழம் சிறுநீரக ஆரோக்கியத்தை அதிகப்படுத்துகிறது. நட்சத்திரப் பழத்தை உட்கொள்வது சிறுநீர் பாதை நோய்த்தொற்றுகளைத் தடுக்கலாம் மற்றும் சிறுநீரக கற்கள் ஏற்படும் அபாயத்தைக் குறைக் கலாம். இருப்பினும், ஏற்கனவே சிறுநீரக நோய்கள் உள்ளவர் கள் மட்டும் இந்தப் பழத்தை சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும்.

பழத்தின் பொட்டாசியம் உள்ளடக்கம் இரத்த அழுத்தத்தை ஒழுங்குபடுத்த உதவுகிறது, இது இதயத்திற்கு ஏற்ற பழமாக அமை கிறது. பொட்டாசியம் நிறைந்த உணவுகள் வாட்டாவை அமைதிப்படுத்தவும், இருதய அமைப்பில் மன அழுத்தத்தைக் குறைக்கவும் நன்மை பயக்கும். இதன் குறைந்த கலோரி மற்றும் கொழுப்பு உள்ளடக்கம் இதயத்தை ஆரோக்கியமாக பாதுகாக்கும்.

ஸ்டார் பழத்தில் குறைந்த கிளைசெமிக் குறியீடு உள்ளது, இது நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்றதாக அமைகிறது. இரத்த சர்க்கரையை ஒழுங்குபடுத்தும் திறன் அதிகமாக உள்ளதால் இந்த பழம் இரத்த ஓட்டத்தில் சர்க்கரையை குறைக்க உதவுகிறது, குளுக்கோஸ் அளவை நிர்வகிக்க இயற்கையான வழியை வழங்குகிறது.

ஸ்டார் பழம் ஏராளமான நன்மைகளை வழங்கினாலும், இந்த பழத்தை ஒன்று இரண்டுக்குமேல் எடுத்துக்கொள்ளக் கூடாது. அப்படி எடுத்துக்கொண்டால் சிலருக்கு வறட்சி மற்றும் சிறுநீரக பிரச்சினைகளை உண்டு பண்ணும்.

ஸ்டார் பழம் என்பது ஆயுர்வேத சமநிலை மற்றும் குணப் படுத்தும் கொள்கைகளை உள்ள டக்கிய ஊட்டச்சத்து நிறைந்த பழமாகும். செரிமானம் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத் துவதில் இருந்து தோல் மற்றும் இதய ஆரோக்கியத்தை மேம்படுத்துவது வரை, அதன் நன்மைகள் மிகப் பெரியவை.

ஆகவே ஸ்டார் புரூச் சீசனில் இந்தப்பழத்தை தேடிப் பிடித்து உங்களது உணவில் சேர்த்துக் கொண்டு ஆயுள் ஆரோக்கியத் துடன் வாழ்க வளமுடன் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!



உணர்வும், உணர்ச்சியும் குருவின் விளக்கம்

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின் எழுமையும் ஏமாப் புடைத்து". என்ற குறளில் ஆமை தன்னை பாது காத்துக்கொள்ள தனது நான்கு கால்கள் மற்றும் தலையை தன் ஓட்டுக்குள் ஒடுக்கிக்கொள்கின்றன. மேலும் ஐம்புலன்களையும் ஒடுக்கிக் கொள்வதால் மூச்சு காற்றை நிலை நிறுத்தும் ஆற்றலை பெற்று நீண்ட நாள் வாழும் உயிரினங்களில் ஒன்றாக வாழ்கின்றன.

இவ்வாறாக மனிதன் தன் ஐம்புலன்கள் மூலம் ஏற்படும் ஆசையை அடக்கி ஆள்வதால் அடுத்த ஏழு தலைமுறைக்கு பாது காப்பாக வாழும் ஆற்றலையும் பெறலாம் என வள்ளுவ பெருமா னார் கூறுகிறார். அதனால் தான் ஒவ்வொரு பெருங்கோவில்களிலும் ஆமையின் உருவத்தை பொறித் துள்ளனர்.

பெரும்பாலும் உணர்ச்சியே உணர்வை அடக்கியாள்கிறது. உணர்ச்சியை தூண்டும் செயல் களான பார்த்தல் , கேட்டல், நுகர்தல், சுவைத்தல், பேசுதல் ஆகியவை மூலமாக ஆசை வெளியேறுகிறது. அவ்வாசையின் விளைவால் எதன் மீது கவனம் செலுத்துகின்றோமோ அதையே பற்றாக மாற்றிக்கொள்கிறோம்.

அது கிடைக்கவில்லை என்றாலோ (அ) தன்னிடமிருந்து பரிக்கப்பட்டாலோ, தன்னைவிட எளியவரிடத்தில் மிக இலகுவாக சினம் கொண்டு, பொறுமை இழந்து அப்பற்றை பற்றிக்கொள்ள பலவகையில் செயல் புரிகிறோம். இந்த உணர்ச்சியின் மூலம் ஏற்பட்ட செயலால் அங்கு ஆராய்ச்சியும் இருக்காது, அமைதியும் இருக்காது, செய்கின்ற செயலில் ஒரு நேர்மை யும் இருக்காது.

அப்படி ஒவ்வொரு முறை செய்யும் போது பெரும்பாலும் துன்பம் ஏற்பட்டு நமக்கு நஷ்டமாக உடலும் மனமும் தான் பாதிக்கப் படுகிறது . அதனால் தான் பகவான் சாய்நாதர் ஐம்புலன்களும் அதனதன் வேலையை செய்யட்டும் மனம் என்னையே நினைக்கட்டும் என்று கூறுகிறார்.

குழந்தை பருவத்தில் நாம் உணர்ச்சியற்ற உணர்வு நிலையிலும், வாலிப பருவத்தில் உணர்வற்ற உணர்ச்சி நிலையிலும்தான் செய லாற்றி வருகிறோம். குழந்தை பருவத்தில் பசிக்கும் போதெல் லாம் அழுகையை உணர்வாக வெளிப்படுத்தி உண்டு வளர்ந்தோம். வளர்ந்த பின்பு பசிக்கவே இல்லை ஆனால் நமக்கு பிடித்த உணவைக் கண்டதும் உண்டு உடலை வளர்க்கின்றோம் .

இவ்வாறாக உணர்ச்சி



சொ.அகஸ்டின்

உணர்வலைகளை மெது மெதுவாக விழுங்குகிறது மலைப்பாம்பு ஆட்டை விழுங்குவது போல, மேலும் உணர்ச்சியின் வெளிப்பாடானது மெய்யறிவை தடை செய்து இறையுணர்வு இறைத் தன்மை இவ்விரண்டையும் உணராத நிலையிலேயே வைத்துக் கொள்கிறது. ஆனால் உணர்வானது தொடர்ந்து தன் வேலையை செய்துகொண்டே இருப்பதால் தான் பக்தியாவது எஞ்சியிருக்கிறது.

அந்த பக்தியிலிருந்து தான் நம் குரு யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் ஞானமார்கத்தை சத்சங்கம் மூலமாக ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் உலக மக்களுக்கு போதித்து வருகிறார். இவ்வாறாக நடைபெரும் சத்சங்கத்தில் ஒருமுறை நடைபெற்ற உரையாடலை இங்கே பதிய நினைக்கிறேன். அப்போது காலை நேரம் குருவிடம் ஒரு கேள்வியாக உணர்ச்சிக்கும் உணர்வுக்கும் உள்ள வேறுபாட்டை எவ்வாறு புரிந்து கொள்வது என்று கேட்கப்பட்டது.

நம்குரு பாபாவின் சாயல் அல்லவா? எளியோர் புரியும் படி கூறினார். இதோ இங்கு இருக்கும் ஆப்பிளை சுட்டி காட்டி இதை பற்றி கூறுங்கள் என்று கேட்டால் நீங்கள் அதைபற்றி செவி வழியாக கேட்டதும் அதைபற்றி படித்ததையும் வைத்து பக்கம் பக்கமாக உணர்ச்சி பொங்க கூறுவீர்கள் (அ) எழுதுவீர்கள். அதற்குள் விதை எத்தனை இருக்கிறது என்றால் தெரியாது ஆனால் அப்பழத்தை சாப்பிட்டால் அதை முழுமையாக அனுபவித்துவிடலாம். அதன் பொருட்டு உணர்ந்து அதன் சுவையையும் அதன் மனத்தையும் இரசித்து கூறலாம். எதையும் அனுபவியுங்கள் இறையணர்வும் அவ்வாறே என்று கூறினார்.


ஒவ்வொரு இறை வழி பாட்டிலும் ஒவ்வொரு உணர்வு இருக்கிறது ஆனால் அதை உணர்ச்சியின் மிகுதியால் உணரமுடியவில்லை அல்லது உணரக்கூடிய தன்மையை சொல்லி தருவதில்லை. இதையும் உணர்ந்த நம் குரு சாய் சங்கமம் மூலம் பஜனை, யாகம், குத்துவிளக்கு பூஜை, ஒளி தியானம், அன்னதானம் என நிகழ்ச்சியின் மூலம் பல்வேறு மெய்ஞான விளக்கங்களையும் , தீட்சையும் அளித்து மக்களை வழி நடத்தி வருகிறார். உலக மக்கள் குருவின் அருளை பெற்று பயன்பெறுமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி வணக்கம்.

குரு வாழ்க குருவே துணை!

சாய் பாபாவின் கருணை!

பாபாவின் மேல், பக்தியும் நம்பிக்கையும் உயிரென இருந்தவர் நானா. சாய் பாபாவின் மீது அவர் கொண்டிருந்த அன்பும், நம்பிக்கையும் அளவில்லாதது. அவரது அன்பையும், நம்பிக்கையையும் சோதிப்பதைப் போன்று அவரது வாழ்க்கையில் ஒரு சோதனை வந்தது.



நானாவின் முதுகில் ஒரு பெரிய கட்டி வளர்ந்தது. அந்தக் கட்டி நாளுக்கு நாள் பெரிதாகிக் கொண்டே இருந்தது. அது தாங்கவே முடியாத அளவுக்கு கடும் வலியை கொடுத்தது. மருந்து, மாத்திரை, வைத்தியம் எல்லாம் முயன்றும் வலி மட்டும் குறையவே இல்லை.

இரவும் பகலும் வலியில் துடிதுடித்தார் நானா. இந்நிலையிலும் அவரின் மனதில் ஒரு எண்ணம் வழுவாக எழுந்தது. அதாவது தன்னிடம் வரும் "பக்தர்களின் துன்பத்தை தன் மேல் ஏற்றிக்கொண்டு, அவர்களை குணமாக்குபவர் பாபா, நாமும் அந்த வலியை பாபாவுக்கு கொடுக்கக் கூடாது என்பதே அது!

இந்த எண்ணத்தாலேயே, பாபாவிடம் நேரடியாக வேண்டிக் கொள்வதைத் தவிர்ந்தார் நானா. ஆனால் வலி எல்லையைத் தாண்டியது. வேறு வழியின்றி, அவர் ஆங்கிலேய மருத்துவரிடம் சென்றார். மருத்துவர்கள் அவரது முதுகுக் கட்டியை பரிசோதனை செய்து, "அறுவைசிகிச்சை தான் ஒரே வழி

ஆனால் அது மிகவும் ஆபத்தானது" ஆயினும் காலதாமதம் இல்லாது நாளை காலையிலேயே அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று கூறினர். இந்த வார்த்தைகள் நானாவின் மனதில்

மரண பயத்தை விதைத்தன.

அன்று இரவு நானா என்ன செய்ய வேண்டும் என்று தெரியாமல், சாய் பாபாவின் படத்தை எடுத்து, தன் தலையணைக்கு அடியில் வைத்து கொண்டு கண்ணீர் விட்டார். பின்பு "என் உயிர் உன் கையில் பாபா" என்று மனதுக்குள் சொல்லிக்கொண்டே தூங்கினார். அடுத்த நாள் நடந்தது ஒரு அதிசயம்

அடுத்த நாள், அறுவை சிகிச்சை செய்யப்படுவதற்கு சற்று முன், மருத்துவர்கள் அறுவைசிகிச்சைக்கு தயாராகிக்கொண்டிருந்தனர். அந்தநாளில் இன்றிருக்கும் வசதியான கட்டிடங்கள் இல்லையாதலால் அறுவை சிகிச்சை செய்யும் கட்டிடம் சாதாரண ஓட்டுக் கட்டிடமாக இருந்தது. அதில் நானா படுக்கையில் குப்புற படுக்க வைக்கப்பட்டிருந்தார். அறுவைச் சிகிச்சையை நினைத்து நானா பயத்தில் கண்ணீர் விட்டு அழுது கொண்டிருந்தார்.

அப்போது மேலிருந்து திடீரென ஒரு ஓடு சரியாக அவர் முதுகிலிருந்த கட்டியின் மீது விழுந்தது! அடுத்த நொடி கட்டி உடைந்து அதில் இருந்து ரத்தமும், சீலுமாக வெளியேறியது. அந்த நேரத்தில் ஏற்பட்ட வலி சொல்ல முடியாத அளவுக்கு கடுமையானது! நானா அலறினார், கதறினார்!

உடனடியாக மருத்துவர்கள் ஓடி வந்தார்கள். நானாவின் முதுகை சுத்தம் செய்து விட்டு சோதனை செய்து பார்த்ததும் அவர்கள் அதிர்ச்சியில் உறைந்து போனார்கள்! ஆம் ஓடு விழுந்த இடத்தில் அறுவை சிகிச்சை செய்து சுத்தம் செய்ததுபோல் இருந்தது. இனி அறுவை சிகிச்சை தேவையே இல்லை! என்று மருத்துவர்கள் கூறினார்கள்.

இந்த வார்த்தைகளை கேட்டதும், நானாவின் கண்கள் கண்ணீரை உகுத்தது.

ஆனால் அது வலியின் கண்ணீர் அல்ல, அது நன்றியாலான கண்ணீர்! சில நாட்களுக்குப் பிறகு, உடல் பூரணமாக குணமடைந்தபின் உடனடியாக பாபாவின் தரிசனத்திற்கு சென்றார் நானா. ஷிர்டி சென்று, சாய் பாபாவை தரிசிக்கச் சென்றார்.

நானாவைப்பார்த்த பாபா, சுற்றி இருந்த பக்தர்களிடம் சிரித்தபடி இந்த வார்த்தைகளைச் சொன்னார். இந்த நானாவின் முதுகில் கட்டி ஒன்று வெகுநாட்களாய் துன்பம் கொடுத்துக் கொண்டிருந்தது. நான் அந்தக் கட்டியை என் விரலால் அழுத்தி உடைத்துவிட்டேன்!"

இந்த வார்த்தைகளை கேட்ட நானா, அதிர்ச்சியிலும் ஆனந்தத்திலும் உறைந்து போனார். என் முதுகில் ஓடு விழுந்தது விபத்து அல்ல, அது பாபாவின் அருள்! அவர் உடனே பாபாவின் பாதங்களில் விழுந்து, கண்ணீர் மல்க வணங்கினார்.

மருத்துவர்களால் முடியாததையும், பக்தியின் மூலம் சாய் பாபா செய்யும் அதிசயங்கள் ஏராளம்! ஏராளம்! அவரிடம் நம்பிக்கை வைத்தால், எப்பேர்பட்ட கொடிய நோயில் இருந்தும், பிரட்சனைகளில் இருந்தும் நம்மை காப்பாற்றும் கருணை தெய்வம் அவர்!

சாய் சங்கமத்தில்
ஸ்ரீ ருத்ர ஹோமம்

திருமதி. சாந்தி வெங்கடாசலம்

ஸ்ரீ சத்குரு சாய் பகவானின் பேரருளினால் நமது குருவும் வழிகாட்டியுமான யோகி ஸ்ரீராம் பாபாவின் பெரு முயற்சியினால், சாய் தியானலயா ஆத்ம ஞான பீடம் வழங்கும் "சாய் சங்கமம்" நிகழ்ச்சியின் இரண்டாவது மாபெரும் ஹோமம் "ஸ்ரீ ருத்ர ஹோமம்" கடந்த 14 .12 .2025 அன்று அயனாவரம், போலீஸ் மாணிக்கம் தெருவில் அமைந்துள்ள "ஸ்ரீ இராமலிங்க வள்ளலார் கோவிலி"ல் வெகு சிறப்பாக நடைபெற்றது.

குரு ஸ்ரீராம் பாபாவின் அறிவுரை மற்றும் ஆலோசனைக்கேற்ப, திருமதி ஜெயந்தி ஸ்ரீராம் அவர்களின் மேற்பார்வையில், சாய் தியானலயா ஆத்ம ஞான பீடத்தின் "ஆத்ம ஞானியர் குழு" நிகழ்ச்சியை வெகு விமரிசையாய் நடத்தினார்கள்.





"ஸ்ரீ ருத்ர ஹோமம்" கார்த்திகை மாதத்தில் நடத்தப்பட்டது மிகச்சிறப்பு. காலை 8 மணிக்கு நிகழ்ச்சி துவங்கியது .

யாகத்திற்கான ஏற்பாடுகளை ஓதுவார் திரு.ராகவேந்திரன் அவர்களின் குழுவினர் சிறப்பாக அமைத்திருந்தனர்.

மேடையில் கலசகும்பங்களும், பாபாவும் வீற்றிருக்க, யாக குண்டம் எதிரில் தயாராக இருந்தது. குரு ஸ்ரீராம் பாபாவின் ஆத்ம ஞான பாடலுடன் நிகழ்ச்சி துவங்கியது. குமாரி அமிர்தா மற்றும் அக்சயா இணைந்து பாடினார்கள். தொடர்ந்து சாயி பஜன்



பாடல்களை திருமதி.ஜெயலட்சுமி மற்றும் அட்சயா பாடி நிகழ்ச்சியை துவங்கி வைத்தார்கள்.

அதனை தொடர்ந்து குத்து விளக்கு பூஜை யை குருஜி அவர்கள் துவங்கி வைத்தார்கள். அதற்கு முன்பு ஸ்ரீ ருத்ர ஹோமம் பற்றியும், குத்து விளக்கு பூஜையின் சிறப்பு பற்றியும் ஞான மார்கத்தில் சிறு சத்சங்கம் நடத்தினார்கள். ருத்ரம் என்பது சிவசொரூபம். சிவம் உடல் சக்தி உயிர். நமது உடல் தான் ஸ்ரீ ருத்ரம் என்பது. நமது ஆன்மாவை தாங்கிய இந்த உடலை பேணி பாதுகாக்கவும், எதிர்மறை ஆற்றலில் இருந்து உடலை காத்து கொள்ளவும், நோய்கள் நீங்கி ஆரோக்கியம் பெற்று வாழ்க்கையில் தடைகள் நீங்கி வளம் பெறவும், உறவுகள் மற்றும் சமூகத்தில் ஒற்றுமை மற்றும் இணக்கம் ஓங்கிடவும் வழிவகுக்கும் ஸ்ரீ ருத்ர ஹோமம்



இது போன்ற யாகங்கள் 2 மாதங்களுக்கு ஒருமுறை நமது சாய் தியானலயா ஆத்ம ஞான பீடத்தின் "சாய் சங்கமம்" மூலம் தொடர்ந்து நடத்தப்படும் என குருஜி அவர்கள் தெரிவித்தார்கள். இன்று நடைபெற்ற ருத்ர யாகத்தில் தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்து சுமார் 125 பேர் அவர்களது குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுடன் கலந்துகொண்டு சிறப்பு செய்தனர்.



தொடர்ந்து குத்து விளக்கு பூஜை பற்றி குருஜி கூறும்போது, தொன்று தொட்டு வணங்கப்படும் தெய்வம் ஒளி தெய்வம். இருளை அகற்றி வெளிச்சம் கொடுக்கும் ஒளியானது, நமது உள்ளத்தில் இருக்கும் இருளினை அகற்றி, ஆன்ம சுடரை ஏற்றி வைக்கும் சக்தி வாய்ந்தது. இத்தீப சுடரை வழிபடுவது உலகில் உள்ள அனைத்து நல்ல சக்திகளை வழிபடுவதும், தீய சக்திகளில் இருந்து விடுபடுவதற்கான வழியும் ஆகும் என தெரிவித்தார்கள்

ஏற்றப்பட்ட விளக்கின் முன் அமர்ந்து நாம் மேற்கொள்ளும் ஒளி தியானமானது, நமது மனம் நிச்சலனமின்றி, அமைதியாய், ஏகத்துவதோடு கூடிய ஆத்ம ஞான பாதையை நமக்கு காட்டக்கூடிய பெருவழி என்பதை கூறி குத்து விளக்கு பூஜை பற்றிய ஞான விதையை நம் மனதிற்குள் தூவினார் குருஜி அவர்கள்.

குத்து விளக்கு பூஜை எல்லா ஏற்பாடுகளுடன் இனிதே துவங்கியது. குருஜி அவர்கள், ஒளி பூஜைக்கு அவர்களே சிறப்பாக எழுதிய போற்றிகளை கூறி பூஜை செய்வித்தார். தொடர்ந்து ஓதுவார்கள் கூறிய மஹாலக்ஷ்மி போற்றிகளையும் கூறி குத்து விளக்கு பூஜை மிக சிறப்பாக நிறைவேறியது.

அதனைத்தொடர்ந்து, சாய் பக்தர்கள் மற்றும் அனைத்து சாய் சொந்தங்களின் மனம் மற்றும் உடல் அரோக்கியத்திற்காக நடத்தப்படும் "ஸ்ரீ ருத்ர ஹோமம்" துவங்கியது. ஓதுவார் அவர்கள், ஸ்ரீ கணபதி தொடங்கி அனைத்து தெய்வங்களையும் கலச கும்பங்களில் ஆவாகனம் செய்வித்து, மந்திரங்கள் கூறி, அதற்கு விளக்கமும் கூறி, யாகத்தினை மிகச்

சிறப்பாக செய்வித்தார்கள்.

ஒவ்வொரு கடவுளுக்கும் அர்ச்சனை செய்வித்து, கலந்து கொண்ட 125 நபர்களுக்கும் பெயர் நட்சத்திரம் ராசி கூறி தனித்தனியாக அவரவர் நலனுக்காக அர்ச்சனை செய்தார்கள் ஓதுவார்கள். அக்னி தேவனுக்கு செய்ய வேண்டிய சிறப்புகளை, மந்திரங்கள் மற்றும் பூஜை பொருட்களின் மூலம் செய்வித்து அக்னி தேவனை குளிர வைத்தார்கள். இறுதியாக பஞ் சாட்சர மந்திரம் கூறி பட்டு வஸ்திரம் சமர்ப்பித்து யாகத்தை சிறப்பாக முடித்து வைத்தார்கள் ஓதுவார்கள்.

பக்தர்களை எம பயம், நோய்கள் மற்றும் எதிரி களிடம் இருந்து காக்கவும் மனதில் தோன்றும் தீய எண்ணங்களில் இருந்து தன்னை தானே காத்துக் கொள்ளவும், வாழ்வில் வெற்றி பெற்று வளம் பெறவும், அனைவருக்கும் அனைத்து செல்வங் களும் கிடைத்திடவும் நடத்தப்பட்ட ஸ்ரீ ருத்ர யாகம் வெகு விமரிசையாக நிறைவடைந்தது.

தொடர்ந்து இந்த ஸ்ரீ ருத்ர ஹோமத்தை சிறப்பாக நடத்த பேருதவி புரிந்த ஆத்ம ஞானியர்களுக்கு குருஜி அவர்கள் பொன்னாடை போர்த்தி பரிசுகள் வழங்கி கௌரவித்தார்கள். பின்னர் கலந்து கொண்ட அனைத்து சாய் அன்பர்களும் பூக்கள் மற்றும் அட்சதை பெற்றுக் கொண்டு கலச கும்பங்களையும், யாக குண்டத்தையும் வலம் வந்து வணங்கி குருஜி அவர்களிடம் ஆசி பெற்று பிரசாத பைகள் பெற்று கொண்டனர்.

தொடர்ந்து பக்தர்கள் அனை வருக்கும் தலை வாழை இலை இட்டு சுவையான அன்ன பிரசாதம் வழங்கப்பட்டது. பக்தர்கள் அனைவரும் மனமும் வயிறும் குளிர உணவருந்திவிட்டு குருஜி அவர்களிடம் விடைபெற்று சென்றனர்.



இந்த ஹோமத்தை ஏற்பாடு செய்து நம் அனைவருக்கும் அதன் பலன்களை கிடைக்க செய்த குருஜி ஸ்ரீராம் பாபா அவர்களுக்கும், இந்நிகழ்ச்சிகளின் சூத்ரதாரியான ஸத்குரு சாய்பாபாவிற்கும் கோடானு கோடி நன்றிகளை சாய் அன்பர்களின் சார்பாக மனப்பூர்வமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி வணக்கம்.

வாசகர் குரல்...



சாய் மகராஜ் குருவைத்தேடி புத்தகத்தை வாசிக்கும் போது குருவிடம் நேரில் பேசுவது போல் உணர்ந்தேன். சிக்கலான பல ஆன்மீக விஷயங்களை மிகவும் எளிமையாக எழுதியிருக்கின்றீர்கள். குருவின் "இனிய பொன்மொழிகள்" வாசிக்க, வாசிக்க என் சிந்தனையே மாற்றியது. வாழ்க்கையை அமைதியாக பார்க்க கற்றுக்கொண்டேன். எளிய வார்த்தையில் ஆழமான உண்மைகள். மனதிற்கு அமைதி கொடுக்கும் ஒரு நல்ல வழிகாட்டி. மிக்க நன்றி குருஜி.

– திருமதி. லோகேஸ்வரி கார்த்திக்,
வாடிப்பட்டி.

கோடானுகோடி நன்றி!

சாயிபாபா கடவுளா கட்டுரை மிகவும் நன்றாக இருந்தது சாய்ராம். எனக்குள் பலநாளாக இருந்த கேள்விக்கு விடை கிடைத்ததைப்போன்று இருந்தது. "தன்னை அடைவதற்கு குரு வழியே சிறந்தது என்று வாழ்ந்து காட்டியவர்" என்ற வரிகள் எனது பார்வையே மாற்றியது. இனி சாயி எனக்கு கடவுளேயாவார். மிக்க நன்றி சாய்ராம்.

– கோபாலகிருஷ்ணன்,
உத்திரமேரூர்.

தேபா சுவாமிகளின் பெயர் விளக்கம் பலநாட்களாக தெரியாமல் இருந்தேன். 'தோ'டுடைய செவியன் பாடல் 'பா'டு என்பதன் சுருக்கமே தோபா என்பதை அறிந்து வியந்தேன். குருட்டினை நீக்கும் குரு கட்டுரை அபாரம். வாழ்த்துக்கள்.

– திரு. கணேஷ்,
பெரம்பூர்.

சிவலிங்கத்திற்குள் கயிலாயம் பயணக்கட்டுரை சிறப்பாக இருந்தது சாய்ராம். தொடர்ந்து பயணக்கட்டுரைகள் வெளியிட்டால் இன்னும் சிறப்பாக இருக்கும். சாய்சரிதம் படிக்க எளிமையா இருக்கின்றது. நன்றி!

– திருமதி. காயத்திரி,
பாபநாசம்.

குருட்டினை நீக்கும் குரு கட்டுரை மிகச்சிறப்பு சாய்ராம். பசுவிடம் பால் பெறுவதற்கு கன்றுக்குட்டி அவசியம் என்பதைப் போன்று, சிவபெருமானின் திருவருளைப் பெறுவதற்கு குருவருள் அவசியம் என்ற வரிகள் பொன்னால் பொறிக்கப்படவேண்டியது. இதுபோன்று குருவின் சிறப்புகளை விளக்கும் கட்டுரைகளை தொடர்ந்து எழுதுமாறு பணிவண்புடன் கோருகின்றோம்.

– திரு. சிவசுப்பிரமணியம்,
பண்ருட்டி.

அன்பு சேவை, ஆத்மசாதனை, இரண்டு பெட்டிச்செய்திகளும், சாயிபாபா கடவுளா கட்டுரையும் என் மனம் கவர்ந்தது. மற்ற கட்டுரைகளும் அமுத மொழியும் நன்றாக இருந்தது. வாழ்த்துக்கள்.

– திருமதி. அபிராமி.
மணலி.

வாழ்வியல் நெறி காட்டும் மெய்ஞானம் தொடரில் வரும் கதைகள் என்னை சிந்திக்க வைக்கின்றது. இதுநாள் வரை வாழ்க்கையை பக்தி செய்கின்றோம் என்று விரயமாக்கியிருக்கின்றோம் என்று புரிய வைத்தது. மிக்க நன்றி நாராயணன் அவர்களுக்கு.

– திரு. பாரிவேந்தர்,
சென்னை.

சாயி மகராஜ் குருவைத்தேடி ஆன்மீக மாத இதழின் ஒவ்வொரு பக்கமும் பயனுள்ளதாகவும், சிறப்பாகவும் இருக்கின்றது. ஆசிரியருக்கும், அனைத்து எழுத்தாளர்களுக்கும் எனது மனப் பூர்வமான ஆங்கில புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துக்கள். தொடரட்டும் உங்களது பணி!

– திரு. தட்சிணாமூர்த்தி,
சென்னை.

ரோஸ்மேரியை இதுவரை வாசனைப் பொருள் என்றுதான் நினைத்திருந்தேன். இப்போதுதான் அது மருந்துப் பொருள் என்பதை அறிந்தேன். மிக்க நன்றி அய்யா. வாழ்க வளமுடன்.

– திருமதி. பார்க்கவி,
தாம்பரம்.

வாசகர்கள் தங்களது மேலான கருத்துக்களை " வாசகர் குரலில்" பதிவிட, கீழ்கண்ட வாட்ஸ் அப் நம்பருக்கு எழுதி அனுப்பும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

சாயிமகராஜ் குருவைதேடி
இணையத்தில் படிக்க...
www.saidhyanalaya.org

சாய் தியானா
வாட்ஸ் அப் நம்பர்
9941816692

அன்னதான சேவை



அன்னதான சேவையில் நீங்களும் பங்குபெற விரும்பினால்
காணிக்கை அனுப்பி உதவலாம்.

G- PAY NO: 9941816692

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திருமதி. சாந்தி வெங்கடாசலம். மயிலை. ரூ.3000.
திருமதி. ஹேமாவதி நமசிவாயம், சாலிகிராமம்.ரூ.2000.
திருமதி. அர்ச்சனா சாய். சென்னை.ரூ.1000.
திரு. சாய் மகராஜ். சென்னை. ரூ.1000.
திருமதி. திருமலைச்செல்வி, கொளத்தூர். ரூ.1000.
திருமதி.ராதா கணபதி,வேளச்சேரி. ரூ.1000.
திருமதி. உமா மகேஸ்வரி. அயனாவரம். ரூ.1000.
திருமதி. சரோஜா இராஜகோபாலன், சென்னை. ரூ.1000

திருமதி.ரத்தினம்மாலா, தூத்துக்குடி. ரூ.600.
திருமதி.நித்யா ராஜேந்திரன், கூடுவாஞ்சேரி. ரூ.500.
திருமதி. சாய்ராம், தூத்துக்குடி. ரூ.500.
திருமதி.பி. மகாலட்சுமி, மதுரை. ரூ.500.
திருமதி. சுகன்யா, சென்னை. ரூ.500.
திரு. பாபு லதா வேப்பம்பட்டு, ரூ.500.
திரு. நீலவண்ண நாராயணன். திருப்பனந்தாள். ரூ.501.
திருமதி.நேத்ராலட்சுமி. கோவை.ரூ.500.
திரு. பாபா மாஸ்டர். பாண்டிச்சேரி.ரூ.500.
திருமதி.பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.
திருமதி. உமா விஜய் ஆனந்த், அயனாவரம். ரூ.400.
திரு.செல்வவிநாயகம், மணலி. ரூ.300.
திருமதி. திலகம் கனி, கதிர். ரூ.300.
திரு. பார்த்திபன், சென்னை. ரூ.300
திருமதி. கலா, அயனாவரம். ரூ.200.
திரு.வி.கே. ரத்தினகுமார், வேளச்சேரி. ரூ.200.
திருமதி. பிச்சையம்மாள். பெரம்பூர்.ரூ.201.
திரு. நிர்மலா, மனேஜர்,சி.சி பேங்க்,
பெரியார் நகர்.ரூ.200.
திரு.குமரன் ஸ்டோர்ஸ் – டிராவல்ஸ் பெரியார் நகர். ரூ.200.
திரு.கே.ராமமூர்த்தி.எல்.ஐ.சி. ஏஜெண்ட். கொளத்தூர். ரூ.200.
திரு.தே. அட்சயா, பெரவள்ளூர். ரூ.200.
திரு. கோபால் சாய், விருகம்பாக்கம்.ரூ.200
திருமதி. திலகா ஷ்யாம்சுந்தர், முகலிவாக்கம். ரூ.101.
திருமதி. பிரியா, அயனாவரம். ரூ.100.
திருமதி.லதா, அயனாவரம்.ரூ.100
திரு.சிவா அரிசி கடை.பெரியார் நகர். ரூ.100.
திரு.டெய்லர்.வேலு, பெரியார் நகர். ரூ.50.
திரு. அகஸ்டின், குன்றத்தூர். அரிசி மூ–1.

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின்
ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* **1 வருட சந்தா** – **ரூ.320**
(தபால் செலவு உள்ளட)

* **3 வருட சந்தா** – **ரூ.850**
(தபால் செலவு உள்ளட)

* **5 வருட சந்தா** – **ரூ.1,400**
(தபால் செலவு உள்ளட)

* **ஆயுள் சந்தா** – **ரூ.3,000**
(தபால் செலவு உள்ளட)

V.ஸ்ரீராம், ஆசிரியர்

99418 16692, 88258 31068

'சாயி மகராஜ் குருவை தேடி',
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு,
அயனாவரம், சென்னை – 600023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.


குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068